பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விழியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 02 சனிக்கிழமை 16.03.2019 கதிர் 132

### இனிது ரகசியம் அல்ல!

தன்னைத் திருத்திக் கொண்டவன்தான் சமூகத்தைத் திருத்தச் சொல்லும் தகுதி பெற்றவனாகின்றான்.

எமது இனத்திற்கு எதிரான இனவழிப்புக்காக நீதிகேட்டு இன்று தமிழினத்தை பொங்கி எழுந்து வரும்படி கோரு பக்கம் 02 »

# யாழில் இன்று மாபெரும் மக்கள் எழுச்சி!



யாழ்ப்பாணம், மார்ச் 16

போர்க்குற்றங்களுக்கு நீதி வழங்குவதற்குச் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் இலங்கை அரசுக்கு ஜெனீவாவில் கால அவகாசம் வழங்கக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்று மாபெரும் எழுச்சிப் பேரணியை நடத்தவுள்ளனர். பக்கம் 11 »

## வலி.வடக்கு கடற்கரைப் பகுதியில் 232 ஏக்கர் 22 ஆம் திகதி அளவீடு!

### கூட்டமைப்பின் அழுத்தத்தையும் மீறி



யாழ்ப்பாணம், மார்ச் 16

வலி வடக்கில் தனியார் காணிகள் உள்ளடங்கலாக 232 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி தெரிவித்திருந்த போதும்காணிசுவீகரிப்புநடவடிக்கைகள் முழு வேகத்தில் நடந்து வருகின்றன.

எதிர்வரும் 22ஆம்திகதி அளவீட்டுப் பணிகள் நடைபெறவுள்ளதாகத் தெரிய வருகின்றது. பக்கம் 11 »

## கோட்டா வெளிநாடு செல்வதற்கு அனுமதி!



கொழும்பு, மார்ச் 16

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் வெளிநாட்டுப் பயணத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை, விசேட மேல்நீதிமன்றம் தற்காலிகமாகத் பக்கம் 11 »

# கோட்டாவை களமிறக்க முடிவெடுத்தார் மஹிந்த!

### ஜனாதிபதி வேட்பாளர் சர்ச்சைக்குத் தீர்வு



கொழும்பு, மார்ச் 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவை நிறுத்துவதற்குக் கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்திருப்பதாக நேற்றிரவு நம்பகரமாக அறியக் கிடைத்தது.

இதனை அடுத்து 'மொட்டு - கை' கூட்டு முயற்சிகள் முற்றாகக் கைநழுவின என்றும் தெரியவந்தது. பக்கம் 11 »

## இலங்கைக்கு 7 கோடி டொலர் நிதி வழங்கியது உலக வங்கி!

கொழும்பு, மார்ச் 16

நாட்டின் நான்கு மாகாணங்களில் வாழும் பத்து லட்சம் பேரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்துக்கென உலகவங்கி இலங்கைக்கு ஏழு கோடி பக்கம் 11 »

## ஹெரோய்ன் நுகர முற்பட்டனர் என 3 மாணவர் யாழ்ப்பாணத்தில் கைது!

### விளக்கமறியலில் வைத்தது நீதிமன்று

யாழ்ப்பாணம், மார்ச் 16

17 வயதுடைய மாணவர்கள் மூவர் ஹெரோய்ன் போதைப்பொருளை நுகர முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பக்கம் 11 »

## 'எமது நிலத்தை விட்டு ராணுவமே வெளியேறு'



சிலாவத்துறையில் நேற்று பொங்கியெழுந்தனர் மக்கள்

மன்னார், மார்ச் 16

மன்னார் சிலாவத்துறையில் நிலைகொண்டுள்ள கடற்படையினரை அங்கிருந்து விலமாறும், தமது சொந்தக் காணிகளை விடுவிக்குமாறும் கோரி நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. பக்கம் 11 »

## சர்வதேசத் தலையீட்டுக்கு முழுக் காரணம் மஹிந்தவே!

### ஐ.தே.க. பகிரங்கக் குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 16

இலங்கை மீது சர்வதேசம் கடும்போக்கைக் கையாள்வதற்கு மஹிந்தவே பக்கம் 11 »

## கட்சியில் இருந்து என்னை ஒதுக்கிவிட்டார் மைத்திரி!

### வேதனையைக் கொட்டினார் சந்திரிகா



கொழும்பு, மார்ச் 16

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதன்னை ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியில் இருந்து பக்கம் 11 »




## பிரியங்கவை கைது செய்யுமாறு கோரி லண்டன் நீதிமன்றம் முன் போராட்டம்!




லண்டன், மார்ச் 16

கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக புலம்பெயர் பக்கம் 11 »

## பால்மாவின் விலை உயர்வு

கொழும்பு, மார்ச் 16

இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளின் விலை அதிகரிப்புக்கு பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதனைடிப்படையில் ஒரு கிலோ கிராம் பால்மா பைக் பக்கம் 11 »

## பரிசுத்தம் இல்லாத வெள்ளையர்களே ஜெனீவாவில் எம்மை விசாரிக்கின்றனர்

### அமைச்சர் மனோ அதிரடிக் கருத்து



கொழும்பு, மார்ச் 16

ஜெனீவாவில் பரிசுத்தம் இல்லாத வெள்ளையார்கள் எம் மீது விசாரணைகளை நடத்துகின்றனர் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். பக்கம் 11 »

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல்!

## மூன்று ஊடக அமைப்புகள் அரசுக்குச் சுட்டிக்காட்டு

**நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பன நாட்டின் ஜனநாயகத்துக்கும் வெளியீட்டுச் சுதந்திரத்திற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என 3 மூன்று முக்கிய ஊடக அமைப்புக்கள் அரசுக்குச் சுட்டிக்காட்டியுள்ளன.**

**இந்த ஜனநாயக விரோதச் செயலில் இருந்து விலகிக்கொள்ளுமாறு அவை அரசைக் கேட்டுள்ளன.**

சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் மற்றும் ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியனவே அரசுக்கு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன.

இது குறித்து அந்த அமைப்புகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நடப்பு அரசு மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை ஒழிக்க ஒப்புக் கொண்டபோதிலும், இன்றளவிலும் அது நடைமுறையில் உள்ளது. தற்போது கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உரிய தரப்பினர் எவரினதும் ஆலோசனை பெறப்படாமல், இரகசியமான முறையில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தில் 'பயங்கரவாதக் குற்றச்செயல்' என்பது பரந்த அர்த்தத்தைக் கொண்டுள்ளது என்பதால், அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசமைப்பு மற்றும் சர்வதேச மரபுகள் ஆகியவற்றுக்கு ஏற்ப நடந்துகொள்ளும் இலங்கையின் கடப்பாடு முறிக்கப்படும் அபாயம் உள்ளது.

கொண்டுவரப்படவுள்ள இந்தச் சட்டம் ஊடகவியலாளர்களை, பொதுமக்களுக்காகப் பிரசுரித்து வெளியிடும் எந்தவொரு தகவலுக்காகவும் கைது செய்யவோ அல்லது தடுப்புக்காவலில் வைக்கவோ அனுமதிக்கிறது.

பதிவு செய்யப்பட்ட ஊடகம் என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதியின் ஊடாக சமூக மற்றும் சமூக ஊடக வலையமைப்புகளை பயன்படுத்துவோர் பெரும் ஆபத்தில் உள்ளனர். அவ்வாறானோரைக் கைது செய்யவோ அல்லது பலவந்தமாகப் பதிவு செய்யவோ நிர்பந்திக்க முடியும்.

இலங்கையில் பயங்கரவாதக் குற்றச்செயல்கள் தொடர்பான 20 சட்ட விதிகள் இப்போதே உள்ளன என்று சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்கு மேலதிகமாக அவசரகாலச் சட்டங்களைப் பிரகடனப்படுத்தும் விசேட அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த பின்னணியில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவும் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வாபஸ் பெறவும் சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் மற்றும் ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவற்றுடன் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் சக்திகள் இணைந்து அரசிடம் கோரிக்கை விடுகின்றன – என்றுள்ளது. (ஐ)

## ஊடகவியலாளர் குமணனின் புகைப்பட கண்காட்சி இன்று

முல்லைத்தீவு, மார்ச் 16

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணனின் 'உத்தரிப்புக்களின் அல்பம்' என்ற புகைப்படக் கண்காட்சி யாழ். பொதுநூலகத்துக்கு எதிரில் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது.

இளம் ஊடகவியலாளரான கே.குமணன் முல்லைத்தீவு மாவட்டத்தின் குமுழமுனையைச் சேர்ந்தவர். போரின் மொத்த விளைவுகளையும் சந்தித்து, அதற்கூடாகவே வளர்ந்தவர். கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து ஊடகத்துறையில் இயங்கிவரும் இவர், மக்கள் போராட்டங்கள் பலவற்றைக் களத்தில் நின்றே வெளிப்படுத்தியிருக்கிறார்.

அந்தவகையில் காணாமலாக்கப்பட்டோர் நடத்திவரும் தொடர் போராட்டங்களின்போது இவரால் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் சிலவற்றை இன்று காட்சிப்படுத்துகின்றார்.

காணாமலாக்கப்பட்டோர் விடயம் அடுத்த தலைமுறையும் கையிலெடுத்துப் போராடத்தொடங்கும் தொடக்கப்புள்ளியாக அமையவேண்டும் எனும் நோக்கோடு இந்தப் புகைப்பட கண்காட்சியை அவர் காட்சிப்படுத்துகின்றார். (ஐ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தேவைகள் தீர்க்கப்படாதிருப்பது ஏன்?

### சபையில் டக்ளஸ் எம்.பி கேள்வி!

கொழும்பு, மார்ச் 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு வசதியின்மைகள் தொடர்பில் அண்மையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது பல்வேறு வசதியின்மைகளுக்கு மாணவர்கள் முகங்கொடுத்து வருகின்றனர் எனக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருந்தனர்.

விடுதி வசதி இன்மைகள், விளையாட்டு மைதான குறைபாடுகள், விரிவுரை மண்டபங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் எனப் பல்வேறு குறைபாடுகள் தொடர்பில் கூறப்படுகின்றது. இவைதொடர்பில் கௌரவ அமைச்சர் அவர்கள் அவதானமெடுப்பார் என நம்புகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கல்வி, நகர திட்டமிடல், நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் உயர் கல்வி ஆகிய அமைச்சுக்கள் தொடர்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களது காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மேலும் சில முக்கியத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

அந்த வகையில், தாதியர் கற்கை நெறிக்கான பதிவும், அங்கீகாரமும் இன்னும் அங்கு இல்லாத் நிலை காணப்படுகின்றது. சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்த ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டும்.

அதேபோன்று இந்து மத கற்கை நெறிக்கான பீடமொன்றினையும், கடல் தொழில் சார்ந்த ஒரு பிரிவினையும் யாழ் பல்கலைக்கழத்தில் நிறுவுவதற்கும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

வவுனியாவில் பல்கலைக் கழகமொன்று அமைக்கப்பட வேண்டும் என்ற எமது நீண்டகால விருப்பத்தை நிறைவேற்றப் போவதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் ஹக்கீம் அவர்களுக்கு எமது மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன் – என்றார். (ஐ)

## பாதாள குழு உறுப்பினர்கள் நால்வர் மடக்கிப் பிடிப்பு!

பாதாள கோஷ்டியைச் சேர்ந்த நால்வர் ஹெரோய்னுடன் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வத்தளை – ஹேக்கித்த பகுதியில் விசேட அதிரடிப்படையினர் நேற்று திடீர்ச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இறங்கினர். இதன் போதே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 17 கிலோகிராம் ஹெரோய்ன், ஒரு கிலோகிராம் கொக்கெய்ன் மற்றும் 1.5 கிலோகிராம் ஹஷீஸ் போதைப் பொருள் ஆகியவற்றுடன் மைக்ரோ ரக துப்பாக்கிகள் இரண்டும் 5 கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், 15 போலி இலக்கத்தகடுகளும் ஒரு தொகை கைவிலங்குகளும் சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்தது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம். அது தன்னைத் தானே ஒரு தடவை சுயவிமரிசனம் செய்து கொள்ள வேண்டிய தேவை இருப்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

நீதி கேட்பவன் யாரோ, அவன் நீதி கேட்கத் தகுதியுடையவனாகத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

எங்கள் இனத்திற்கு எதிராக இனவழிப்புச் செய்தன இலங்கை அரசுப் படைகள்.

அது பற்றிக் கேட்டால் யுத்தக் குற்றம் ஏதும் புரியவில்லை என்றும், குடிமக்களின் ஒரு சொட்டு இரத்தம் கூடச் சிந்தவிடாமல் 'பயங்கரவாதிகளை' மட்டும் அழித்தோம் என்கின்றது படைத் தரப்பு. இலங்கை அரசும் அதைத் தான் கூறுகின்றது.

அது எவ்வளவு தூரம் அப்பட்டமான பொய், முழுப் பூசணிக் காயை சோற்றில் மறைக்கும் வேலை என்பது எங்களுக்கும் தெரியும்; அரசுத் தரப்புக்கும் தெரியும்; படைகளுக்கும் தெரியும்.

அதுபோன்ற பதில் ஒன்றைத் தான் 'ராகிங்' விடயத்திலும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் தெரிவிக்கின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தில் பகிடிவதை எனத் திட்டமிட்ட பிரசாரங்கள் தொடர்ந்தது முன்னெடுக்கப்படுகின்றமை கவலையளிப்பதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கூறுவதும் –

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தக் குற்றம் ஏதும் இழைக்கப்படவேயில்லை என்று இராணுவம் கூறுவதும் –

உண்மை விவகாரத்தில் ஒரே 'டிகிரி' அளவுடையவைதான்.

ஆயுதங்களுடன் இருந்தவர்கள் புரிந்த அந்தக் காட்டுமிராண்டித்தனமும், படித்தவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் இங்கு புரியும் காட்டு மிராண்டித்தனமும் பாதிப்பில் வேறுபடலாம். ஆனால் தன்மையில் ஒன்றே.

விடுதலை வேண்டி நிற்கும் நமது தமிழ்ச் சமூகத்துக்குள் பகிடிவதை என்ற காடைத்தனத்தைப் புரிந்து கொண்டிருக்கும் ஒரே சமூகத்துக்கு நமது அரசியல் தலைமைகளைக் குறை சொல்லவும், நமது இனத்தின் அரசியல் செல்நெறிகளை தமது கையில் எடுத்து வழி நடத்தவும் என்ன தகுதி, தம்மியம் இருக்க முடியும்?

தமக்குள் இருக்கும் பகிடிவதை என்ற காடைத்தனத்தை ஒழிக்க முடியாத இவர்கள் –

அது, நடக்கத்தக்கதாக, அப்படி நடக்கவே இல்லை என்று மூடி மறைத்துப் பொய்யுரைக்கும் இவர்கள் –

அதன் மூலம் அந்தக் காடைத்தனம் தொடர்வதற்கு சூத்திரதாரிகளாக விளங்கும் இவர்கள் –

தமிழ்ச் சமூகத்தை வழி நடத்த முற்படுபவர்களாகத் தங்களைக் காட்டிக்கொண்டு மேதாவிகளாக முற்படுவது இன்னொரு அராஜகமன்றி வேறில்லை.

பல்கலைக்கழக முதலாமாண்டு மாணவர்கள் தினசரி வேட்டியுடன் விரிவுரைகளுக்கு சமுகம் தருவதே இந்த அராஜகவாதிகளின் காடைத்தனத்துக்கு முதல் சாட்சியமாகும்.

பகிடிவதை என்ற சமூகச் சீரழிவை – காடைத்தனத்தை – அவிழ்த்து விட்டு, அந்தக் கொடூரம் நடைபெறுவதை மூடிமறைத்துக் கொண்டு, அதைத் தொடர்ந்து புரிந்து வரும் சமூகச் சீரழிவாளர்களின் கைகளில் எமது அரசியல் எதிர்காலத்தை வழிநடத்தும் விடயம் கைமாறும் அவலத்தில் நாம் இருப்பது எமக்கு ஏற்பட்ட இன்னொரு துரதிஷ்டமாகும்.

யாழ். பல்கலைக்கழகத்தை முதலில் நெறிப்படுத்தி, சீர்படுத்தி, தங்களை முன்மாதிரியாகக் காட்டக்கூடிய ஒரு புதிய தலைமையின் கீழ் இத்தகைய நீதி தேடும் – 'நீதிக்காய் எழுவோம்' பேரணி நடப்பதே பொருத்தமானது என்பது எனது கருத்து.

பகிடிவதை என்ற சமூகச் சீரழிவைத் தொடரும் 'பல்கொலைச் சமூகம்' இத்தகைய கோஷங்களை முன்வைத்து அரசியல் பண்ணுவது இன்னொரு பித்தலாட்டம் என்பதுதான் என் கருத்து.

புத்திஜீவிகளை உருவாக்க வேண்டிய யாழ். பல்கலையில் 'உண்மையான' – 'நேர்மையான' – 'வெளிப்படையாக உண்மை உரைக்கக் கூடிய' – மாணவ தலைமை எப்போது வருகின்றதோ அன்றுதான் சமூகத்தை வழிநடத்தும் இளம் சமுதாயத்துக்கான உண்மையான தகுதி அதற்குக் கிட்டும் என்று நான் நம்புகிறேன்.

தனது பக்கத்தில் அரங்கேறும் பகிடிவதை என்ற சமூகச்சீரழிவைக் கூட வெளிப்படையாக எதிர்க்கத் தகுதியற்ற – எதிர்க்க அஞ்சுகின்ற – அதனை மூடி மறைக்கின்ற – தலைமைகள், இளைஞர் கூட்டத்தைத் திரட்டி நீதி கேட்பது என்பது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானதுதான்!

– மின்னல் –

# தமிழருக்கு அநீதி இழைப்பென இனிமேல் யாரும் கூறக்கூடாது

## மஹிந்த தரப்பு சபையில் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 16

தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக இனியும் கூறமுடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அடிப்படைத் தேவைகள் வடக்கு, கிழக்கு, தெற்கு எனப் பல மாகாணங்களிலும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன என மஹிந்த அமரவீர கூறினார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிப் பேசிய இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், உங்களது ஆட்சிக் காலத்தில் வடக்கில் எவ்வித அபிவிருத்தியும் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால், நாம் ஆட்சிக்கு வந்த நான்கு வருடங்களில் வடக்குக்கான பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார்.

இதனையடுத்துசபையில்தொடர்ந்து உரையாற்றிய மஹிந்த அமரவீர, வடக்கில் எவ்வித பிரச்சினைகளும் இல்லையென்றால் அது மகிழ்ச்சியானது. அதனை ஜெனீவாவுக்கும் போய்ச் சொல்லுங்கள். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வாய்களினால் கூறச் சொல்லுங்கள்.

வடக்குக்கான அனைத்து வசதிகளையும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா செய்துக் கொடுத்துள்ளாரா என நாம் வடக்கு மக்களிடம் கேட்கவுள்ளோம். அவ்வாறு அவர் செய்திராவிடின் அவரை வடக்குக்குள் அனுமதிக்காதீர்கள்.

அவர் கூறுவதை வைத்துப் பார்க்கும்போது வடக்கு பூரணமாகியுள்ளது. ஆனால், தெற்கில் எமக்கு அந்த நிலை இல்லை. அவ்வாறாயின் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக இனியும் கூறமுடியாது. வடக்கில் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுள்ளன- என்றார். (ஐ)

# கடனைத் திருப்பிச் செலுத்தும் கட்டாயத்தில் இலங்கை அரசு

## கூறுகிறார் அமைச்சர் சம்பிக்க



கொழும்பு, மார்ச் 16

கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச்செலுத்த வேண்டியகட்டாய நிலையில், இலங்கை காணப்படுவதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இதற்கான செயற்பாடுகளை அரசு தற்போது முன்னெடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாடுதொடர்பாகப்பல்வேறு விமர்சனங்கள் தற்போது முன்வைக்கப்படுகின்றன.

அரசுசரியில்லை என்றும் கடனில் நாடு தத்தளிக்கிறது என்றும் அரசியல்வாதிகள் ஊழல்வாதிகள் என்றும் தொடர்ச்சியாக விமர்ச்சிக்கப்படுகிறது. சிலர், இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் கூறி வருகிறார்கள்.

இலங்கையிலிருந்து வெளியேறியபெரும்பான்மையான சிங்களவர்கள் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார்கள்.

அதேபோல், வடக்கிலிருந்து வெளியேறிய பெரும்பான்மையான தமிழர்கள் கனடாவில் குடியேறியுள்ளார்கள். இதிலிருந்தே எமது மக்கள் வெளியேறும் வீதம் எந்தளவில் உள்ளது என எமக்கு தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

எனினும், கடந்த காலங்களை விடத் தற்போது தனிநபரின் வருமானம் அதிகரித்துள்ளது அதேபோல், கடன் சுமையும் அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த 2019ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக மக்களுக்குத் தேவையான பல்வேறு நலத்திட்டங்களை நிதியமைச்சர் முன்மொழிந்துள்ளார்.

கடன் சுமையைக் குறைப்பதுதான் எமது பிரதான நோக்கமாகும். இதனை மேற்கொள்ளவே நாம் தற்போது பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

இதனை, திருப்பிச்செலுத்தாவிடின் நாடு நிச்சயமாக குழப்பகரமான நிலைமைக்கு தள்ளப்படும் – என்றார்.(ஐ)

# வயல் காவலில் ஈடுபட்டோர் மீது மர்ம நபர்கள் இரவு வாள்வெட்டு!

## சேமமடுவில் இருவர் படுகாயம்

வவுனியா – ஓமந்தை, சேமமடுப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சேமமடுப் பகுதியில்வயல் காவலுக்காக இருந்த இருவர் மீது இனந்தெரியாத நபர்கள் வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து ஓமந்தைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் படுகாயமடைந்த நிலையில் காணப்பட்ட இருவரையும் பொலிஸ் வாகனத்தில் வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று அனுமதித்தனர். கால் மற்றும் கைகளில் வாள் வெட்டுக் காயங்களுடன் வசந்தகுமார் (வயது – 37) , கன்னம் மற்றும் கழுத்துப் பகுதியில் வாள்வெட்டுக் காயங்களுடன் கருணாகரன் (வயது – 33) என்பவரும் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் திடீர் விபத்துப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் பொல்கஹவெல விபத்தில் சாவு

கொழும்பு, மார்ச் 16

பொல்கஹவெல மெத்தலந்த பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. வான் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டமையாலேயே இந்த விபத்து நேர்ந்தது.

சம்பவத்தில் ஓட்டோவில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் தந்தை மற்றும் வயோதிபப் பெண் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் .

அவர்களின் பிள்ளைகள் மூவரும் படுகாயமடைந்த நிலையில், பொல்ஹவெலவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வாக்குகள் தேவைப்படும்போதே வடக்கை நினைக்கின்றது அரசு

## சபையில் நாமல் எம்.பி. காட்டம்



கொழும்பு, மார்ச் 16

வடக்கு மக்களின் வாக்குகள் தேவைப்படும்போதே, அப்பகுதியின் அபிவிருத்தி குறித்து அரசுக்கு நினைவுக்கு வருகின்றது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன் தினம் நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகள் தேவைப்படும்போதே அரசு வடக்கின் அபிவிருத்தியில் கவனம் செலுத்துகின்றது.

நாட்டில் வறுமையை ஒழிப்பதற்குப் பல செயற்றிட்டங்களை முன்னெடுப்பதாகத் தற்போதைய அரசு வாக்குறுதி வழங்கியது. ஆனால் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இன்னும் வறுமையிலேயே உள்ளனர்.

இளைஞர் யுவதிகளுக்காக 10,000க்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புக்களை உருவாக்கி தருவதாகவும் அரசு குறிப்பிட்டது. இருப்பினும் தற்போது 60,000 ஆயிரம் தொழிலற்ற பட்டதாரிகள் நாட்டில் உள்ளனர். இவ்வாறு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாமல் அவர்களை ஏமாற்றும் செயற்பாட்டையே அரசு தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது – என்றார். (ஐ)



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

### நீதி கேட்டு இன்றைய தினம் ஒன்றுபட்டுப் பொங்கி எழுவோம்

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விவகாரம் எதிர்வரும் புதன்கிழமை விவாதத்துக்கு எடுக்கப்படவிருக்கின்றது.

எமது தமிழினத்தின் மீது இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் இலங்கை அரசு இனவழிப்பை அரங்கேற்றி சுமார் பத்து ஆண்டுகள் கழியும் காலம் இது.

இன்னமும் இந்த விடயத்தில் எமக்கான நீதியைப் பெற்றுத் தராத சர்வதேசம், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இந்த விடயத்தை ஜவ்வு மிட்டாய் இழுப்பது போல இழுத்துக் கொண்டிருக்கின்றது. காலத்தை இழுத்தடித்து, நீதி கிட்டும் விடயத்தை நீர்த்துப் போகச் செய்யும் கைங்கரியமே திட்டமிடப்பட்ட முறையில் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழினத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படும், உண்மைகள் கண்டறியப்படும், பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப் படும், இழப்பீடுகள் வழங்கப்படும், மீள நிகழாமை உறுதிப் படுத்தப்படும், நல்லிணக்கமும், புரிந்துணர்வும் ஏற்படுத்தப் படும், அமைதித்த தீர்வு - சமாதான வாழ்வு - எட்டப்படும் என்றெல்லாம் இந்தப் பத்தாண்டு காலமும் திரும்பத் திரும்பக் கூறி மக்களை ஏமாற்றியாகி விட்டது.

காகிதத்தில் கூறப்பட்ட விடயங்கள் எவையும் நடைமுறையில் செயற்பாட்டுக்கு வரவேயில்லை.

இந்த விடயங்களை ஒப்பேற்றுவதற்காக சர்வதேச கண்காணிப்பு, ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் தீர்மானங்கள் நிறைவேற்றம், ஜெனீவாவில் விவாதங்கள் என்று பல்வேறு விடயங்கள் நடந்தேறின. ஆனால் அவை எல்லாம் ஏட்டுச் சுரக்காயாக அமைந்தனவே தவிர, காரியத்தில் - செயலில் - எவையும் சித்திக்கவேயில்லை.

இந்த விடயங்களை ஒட்டி இலங்கையில் கொழும்பு அரசு வெளிப்படுத்தும் பிரதிபலிப்புகள் இவை எவையும் நடைபெறப் போவதில்லை - தமிழருக்கு நீதி செய்யப்படப் போவதில்லை - உண்மைகள் கண்டறியப்படப் போவதில்லை - பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படப் போவதில்லை - இழப்பீடுகள் வழங்கலோ, மீள நிகழாமையை உறுதிப்படுத்தலோ செயல்வடிவம் பெறப்போவதில்லை - என்பவற்றையே தெளிவாகக் காட்டுகின்றன. அதுவே வெட்டவெளிச்சமாகத் தெரிகின்றது.

இந்தச் சூழலில்தான் ஜெனீவாவில் இந்த விடயம் மீண்டும் பரிசீலனைக்கு வருகின்றது. அதே ஆரவாரங்கள், விவாதங்கள், பேச்சுகள், உரைகளுக்குப் பின்னர் அதே தீர்மானம் நிறைவேற்றும் பல்லவியும், மேலும் இரண்டு ஆண்டுகளுக்குக் காலத்தை இழுத்தடிக்கும் திட்டமும் ஒப்பேறப் போகின்றன.

தேவையானால், இலங்கை மீதான சர்வதேசக் கண்காணிப்பு இன்னும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்படப் போகின்றது என்று நமக்கு நாமே சமாதானம் கூறி மகிழலாம். அவ்வளவுதான். அதற்குமேல் பயனுள்ள விடயம் ஏதும் நடக்கும் - அரங்கேறும் - என்று நம்புவதற்கு இடமேயில்லை.

மாறாக, இந்த விவகாரம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கிப் போய்க் கிடப்பதற்கு இந்தப் புதிய பிரேரணை - அல்லது வரும் புதன்கிழமைக்குப் பின்னர் புதிய தீர்மானம் - உதவப் போகின்றது என்பதுதான் யதார்த்த நிலைமையாகும்.

இதே ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் 2015 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்ட எந்த விடயமும் இன்னும் ஒழுங்கு முறையாக நிறைவு செய்யப்படவில்லை.

★ பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை.

★ அரசியல் கைதிகள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை.

★ ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயக மண், மக்கள் குடியிருப்புகள், விவசாய நிலங்கள் இன்னும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

★ காணாமல் போனோர் பிரச்சினைக்கு நீதியான தீர்வு முன்வைக்கப்படவில்லை.

இவை தவிரவும், தமிழர் தாயகத்தில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களும், பௌத்த மயமாக்கலும் தீவிரமாகத் தொடர்கின்றன.

இவ்வாறு தமிழருக்கு எதிரான அநீதி தொடருகையில், அதற்கு எதிராக நீதி கேட்டு தமிழர்கள் பேரணியாகப் பொங்கியெழுகின்றார்கள்.

அந்தப் பேரணியில் பங்குபற்றி நீதிக்கான தமது குரலை ஓங்கி ஒலிப்பது ஒவ்வொரு தமிழனினதும் பொறுப்பான கடமையாகும்.

# போர் பாதித்த தமிழ் மக்களின் தேவைகள் நிறைவேறவில்லை

## சபையில் விஜயகலா விசனம்



கொழும்பு, மார்ச் 16

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் தேவைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை எனக் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான பல திட்டங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அது வரவேற்கத்தக்கது.

வடக்கு - கிழக்கு மாகாணம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். யுத்தத்தினால் பேரிழப்புக்களைச் சந்தித்த, மக்களுக்குத் தீர்வு வழங்கவேண்டும்.

வடக்கிலிருந்து வெளியேறிய முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் துரித கதியில் தீர்க்கப்பட வேண்டும். வடக்கு, கிழக்கிலிருந்து வெளியேறிய அனைத்து மக்களும் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியேற்றப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# சமூகநீதிக்கான மக்கள் அமைப்பும் எழுச்சிப் பேரணிக்கு முழு ஆதரவு

கிளிநொச்சி, மார்ச் 16

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நிலைப்பாடு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும் எனச் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு போர்க்குற்றம் தொடர்பாகச் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்தும் யாழ். பல்கலைக்கழகச் சமூகம் மேற்கொள்ளும் எழுச்சிப் பேரணிக்கு அந்த அமைப்பு தமது ஆதரவை வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், 'நாளை(இன்று) இடம்பெறவுள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் மாபெரும் எழுச்சிப் பேரணியில் நாமும் கலந்கொள்வதோடு, எமது முழுமையான ஆதரவையும் வழங்கி நிற்போம்.

தமிழ் மக்களின் உரிமைகள், நலன்கள் சார்ந்த விடயத்தில் எமது ஆதரவும் ஒத்துழைப்பும் என்றும் இருக்கும்.

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நிலைப்பாடு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் பொறிமுறையாகவும் இருக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# எழுச்சிப் பேரணிக்காக போக்குவரத்து ஒழுங்கு

தமிழ் இனத்துக்கு நீதி கோரி இன்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் எழுச்சிப் பேரணியில் மக்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா என வடக்கின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் செய்யப்பட்டிருப்பதாக பல்கலைக்கழகச் சமூகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பருத்தித்துறை, நெல்லியடி, ஆவரங்கால், கோப்பாய், கல்வியங்காடு, ஊடாக காலை 8.10 மணிக்கும்,

அச்சுவேலி, ஆவரங்கால், கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், ஊடாக காலை 8.20 மணிக்கும்,

வசாவிளான், புன்னாலைக் கட்டுவன், திருநெல்வேலி, ஊடாக காலை 8.20 மணிக்கும்;

மாவட்டபுரம், சுன்னாகம், கொக்குவில், ஊடாக காலை 8.10 மணிக்கும்,

காரைநகர், மூளாய், சுழிபுரம், சித்தன்கேணி, மானிப்பாய், ஊடாக காலை 8.20 மணிக்கும்,

கொழும்புத்துறை, பாஸையூர், குருநகர், ஊடாக காலை 8.30 மணிக்கும், கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, நாவற்குழி ஊடாக காலை 8.30 மணிக்கும் என பஸ்கள் புறப்பட்டு பல்கலைக்கழகத்தை வந்தடையவுள்ளன.

அதே போன்று முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து துணுக்காய் பிரதேச செயலகம், மல்லாவி, வன்னிவிளாங்குளம், மாங்குளம், கிளிநொச்சி, பளை, யாழ்ப்பாணம் ஊடாக காலை 7.00 மணிக்கும்,

முள்ளியவளை, முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு, விசுவமடு, பரந்தன், பளை ஊடாக காலை 7.00 மணிக்கும்,

பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், வன்னிவிளாங்குளம், மாங்குளம், கிளிநொச்சி, பளை, யாழ்ப்பாணம் ஊடாக காலை 7.00 மணிக்கும்,

அளம்பில், சிலாவத்தை, முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, விசுவமடு, பரந்தன், பளை ஊடாக காலை 7.00 மணிக்கும் பஸ்கள் புறப்பட்டு பல்கலைக்கழகத்தை வந்தடையவுள்ளன.

வவுனியா மாவட்டத்திலிருந்து வவுனியா பழைய பஸ் தரிப்பிடம், ஓமந்தை, மாங்குளம், கிளிநொச்சி, பரந்தன், பளை ஊடாக காலை 7.00 மணிக்கும்,

சிதம்பரபுரம், வவுனியாப் பல்கலைக்கழகம், ஓமந்தை, மாங்குளம், கிளிநொச்சி, பரந்தன், பூநகரி ஊடாக காலை 7.00 மணிக்கும் பேருந்துகள் புறப்பட்டு பல்கலைக்கழகத்தை வந்தடையவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வன்னேரி, அக்கராயன், ஸ்கந்தபுரம், கோணாவில், ஊற்றுப்புலம், கனகபுரம், கிளிநொச்சி, பரந்தன், பளை ஊடாக காலை 7.00 மணிக்கும்,

தேராவில், புளியம்பொக்கணை, பரந்தன், பளை ஊடாக காலை 7.00 மணிக்கும், கல்மடு, ராமநாதபுரம், வட்டக்கச்சி, கோவிந்தன் கடைச்சந்தி, ரத்தினபுரம், பரந்தன், பளை ஊடாக காலை 7.00 மணிக்கும்,

கிளிநொச்சி வைத்தியசாலை, பரந்தன், பளை; ஊடாக காலை 7.00 மணிக்கும் பேருந்துகள் புறப்பட்டு பல்கலைக்கழத்தை வந்தடையவுள்ளன.

மேலும் மன்னார் மாவட்டத்திலிருந்துதலைமன்னார், பேசாலை, மன்னார், முழங்காவில், பூநகரி ஊடாக காலை 7.00 மணிக்கும்,

முத்தரிப்புத்துறை, நானாட்டான், வங்காலை, மன்னார், முழங்காவில், பூநகரி ஊடாக காலை 7.00 மணிக் கும், சிலாபத்துறை, முருங்கன், மன்னார், முழங்காவில், பூநகரி ஊடாக காலை 7.00 மணிக்கும் பேருந்துகள் புறப்பட்டு பல்கலைக்கழகத்தை வந்தடையவுள்ளன.

இதே வேளை தேவைகளிற்கேற்ப பேரூந்து ஒழுங்கு செய்யப்படும்.

முதலுதவி மற்றும் அவசர உதவிக்கு 0213214444 இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த எழுச்சிப் பேரணி ஆரம்பமாகி பலாலி வீதி, கந்தர்மடம் சந்தி, ,இந்து மகளிர் கல்லூரி வீதி, பிறவுண் வீதி, நாவலர் வீதி, மின்சார நிலைய வீதி, யாழ் நகரம், வைத்தியசாலை வீதி, மணிக்கூட்டுக் கோபுர வீதி ஊடாக மாநகர சபைமைதானத்தைச்(சுப்பிரமணியம்பூங்கா முன்பாக) சென்றடையவுள்ளது. இதற்கமைய காலை 10.00 மணிக்கு பல்கலைக்கழக முன்றிலில் இருந்து ஆரம்பிக்கும் பேரணி மாநகர சபை மைதானத்தை சென்றடைந்ததும் தெளிவூட்டல் உரை மற்றும் பிரகடன அறிக்கை வாசிக்கப்படும்.

குறிப்பாக தேவையற்ற அசம்பாவிதங்களைத் தவிர்க்கும்பொருட்டு கோசங்கள், பதாகைகள், பனர்கள் என்பன பல்கலைக்கழக சமூகத்தினாலேயே ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் என்றும் யாழ். பல்கலைக்கழகச் சமூகம் அறிவித்துள்ளது.

### நாளை

17.03.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: பூசம் சித்தம் மு.இ. 08.41 வரை.
திதி : ஏகாதசி பி.ப. 05.01 வரை.
சுபநேரம் : 09.19 – 10.49 வரை
இராகுகாலம் : 04.49 – 06.19 வரை

# வடக்கு மாகாணத்துக்கு புதிய பல்கலைக்கழகம்!



## 2 வாரங்களில் வர்த்தமானி அறிவிப்பு எனச் சபையில் ஹக்கீம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் ஓரிரு வாரங்களில் வெளியிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கிழக்கில் இரண்டு பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றபோதிலும், பிரச்சினைகள் காரணமாக வடக்கு மாகாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் மாத்திரமே காணப்படுகின்றது.

இந்நிலையில், யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வன்னிப்பல்கலைக் கழகமாகத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வி மிகவும் முக்கியமானதாகும். எனவே, அதனை மேம்படுத்துவது அவசியமாகும். பல்கலைக்கழகத்துக்கு பிரவேசிப்போர் எண்ணிக்கை கடந்த 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் அதிகரித்துள்ளது. அது பாராட்டத்தக்கது.

இந்நிலையில், மருத்துவ பீடத்துக்கான மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி மருத்துவ பீட மாணவர்களின் எண்ணிக்கையை 300ஆக அதிகரிக்கஎதிர்பார்க்கப் பட்டுள்ளது – என்றார். (ஐ)

# கிழக்குப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் கூட்டமைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 16

இலங்கைக்கு மேலதிக கால அவகாசம்வழங்கக்கூடாது என்றுஏகோபித்த குரலில் ஒலிக்கவேண்டும் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளினால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு ஆதரவு வழங்கக் கோரி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்கு மேலதிக கால அவகாசம் வழங்கக்கூடாது என வலியுறுத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் எதிர்வரும் மார்ச் 19ஆம் கடையடைப்பு மற்றும் கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்படவுள்ளது. இந்தக் கவனவீர்ப்புப் பேரணிக்கு நாம் எமது பூரண ஆதரவை வழங்குவோம்.

இந்தக் கடையப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். இதேவேளை, அரச - தனியார் பஸ் போக்குவரத்தை நிறுத்தியும், பொது மக்கள் பயணங்களைத் தவிர்த்தும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இன, மத, மொழி வேறுபாடுகளின்றி அனைவரும் இதில் கலந்துகொண்டு போராட்டத்திற்கு வலுசேர்க்கவேண்டும்.

நாட்டில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், படுகொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகளை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையினூடாக குற்றவியல் நீதிமன்றில் முன்னெடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# மின் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 16

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் –**

சில்லாலை, சாந்தை, நவாலி, மூத்த விநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, உசன், விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி, 52ம் பிரிவு இராணுவ முகாம், Tokyo Cement Concrete Mixture Plant ஆகிய இடங்களிலும்–

**கிளிநொச்சி பிரதேசத்தில்–**

அரசர்கேணி, கச்சாய்வெள, தர்மகேணி, முகமாலை, இத்தாவில், எழுதுமட்டுவாழ் ஆகிய இடங்களிலும்–

**மன்னார் பிரதேசத்தில்–**

கரைசலிலிருந்து தலைமன்னார் வரை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ்தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், தலைமன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.




## பகைவரிடமும் அன்பு கூருங்கள்...!

சிந்திக்கும் ஆற்றல் உள்ள மனிதனே தன்னை முதன்மைப்படுத்தி வாழும் நோக்கில் மற்றவர்களை ஆள நினைக்கின்றான். இதனாலே ஏற்படும் போட்டிகளே பகையை தோற்றுவிக்கின்றது. குறிப்பிட்ட நூறு ஆண்டுகளுக்குள் வாழ்ந்து இறந்து விடும் மனிதன், நிரந்தரமாகவே இவ்வுலகில் வாழ்வேன் என்ற எண்ணம் கொண்டவனாக, அடுத்தவரைப் பகைத்து, தானும் தனது குழுக்களும் வாழும் நிலையாலே உலகமே அமைதியற்ற நிலைக்கு உள்ளாகி இருக்கின்றது.

ஆதி மனிதனிலே தோன்றிய பகையுர்வையும் கொலை வெறியும் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. சமயங்கள் மனிதர்களை நல்வழிப்படுத்தினாலும் மனிதன் பல வேளைகளில் மனிதத் தன்மையும் இழந்து மிருகமாகி விடுகிறான். ஆன்மீக பாதை யிலே ஆண்டவன் சிந்தனையிலே வாழும் பொழுது, அயலவரை அன்பு செய்யும் வழி முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஆண்டவனை மறந்து உலகப் போக்கின்படி வாழும்போதே பகைமை நிலைகள் உருவாகின்றன. பணத்தினாலே அதிகாரம் செய்ய முற்படும்போது, பல எதிரிகள் உருவாகின்றார்கள். மனிதத் தன்மைகள் மதிக்கப்படாமல் அநீதி கோலோச்சுகின்றது. எதிர்க்க முடியாதவர்கள் ஏழையாக வாழ்கின்றார்கள் எதிரிகளை எதிர்க்க முடியாது. அவர்கள் வாழ்வு மாறிட அவர்களை மன்னிக்க இறைவனிடம் அவர்களுக்காக மன்றாடும் பொழுதே நாம்பகைவரையும் மன்னிக்கின்றோம் அன்பு செய்கின்றோம். எம்மை ஏற்றுக் கொள்ளாதவரை மன்னிக்கும்போது எமது செயலானது பகைவருக்குச் செய்யும் அன்பாகவே இருக்கின்றது.

- அன்ரனிபீற்றர் -

(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்)

# சூரிய மின்கலத்தொகுதி வவுனியாவில் திறப்பு



வவுனியா, மார்ச் 16

வவுனியா, அட்டமஸ்கட பகுதியில் 36 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட சூரிய மின்கலத் தொகுதி நேற்றுமுன்தினம் மின்சக்தி எரிபொருள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் கலந்துகொண்டு சூரிய மின் கலத்தொகுதியின் கட்டடத்தின் பெயர் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் கருணாதாச, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர் முத்து முகமது, உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சூரிய மின்சக்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் 'வின்போஸ்' என்ற தனியார் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட சூரிய சக்தி மின்கலத் தொகுதியிலிருந்து நாளாந்தம் ஏழு ஆயிரம் வோல்டேஜ் மின்சக்தி உற்பத்தி செய்யப்படவுள்ளது.

இவ்வாறு பெறப்படும் மின்சக்தியானது இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டு தேசிய ரீதியில் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

P. உமாசங்கர் வளவாளர்களின் விசேட கருத்தரங்கு

பொதுஅறிவு

(தேசிய சர்வதேச போக்குகள் மிக நவீன விடயங்களுடன் புதிய பரீட்சை மாற்றத்திற்கு அமைவாக)

S. அன்ரன் பெரேரா

(SLAS, SLEAS பதிவாளர் வரிமதிப்பீட்டாளர் புள்ளி விவரவியலாளர் சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைகளுக்கு ஏற்ப)

17.03.2019 ஞாயிறு

9.00 am - 4.00 pm

# இடதுசாரி தலைவர்களை நினைவு கூரும் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்.16

அண்மையில் காலமான இடதுசாரி இயக்கத் தோழர்களான கே.பி.சில்வா, ஜெயதிலக்க டி சில்வா ஆகியோரை நினைவு கூரும் கூட்டம் நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு யாழ். பலாலி வீதி இலுப்பிட்டிச் சந்தி டி.எம்.ஜ. தொழில்நுட்பப் பிரிவில் சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறும்.

இடதுசாரி இயக்கத்தைச் சார்ந்த சுத ஸ்ரீதரன், க.தனேந்திரராஜா ஆகியோர் உரையாற்றுவர். என சர்வதேச மார்க்சிய குழு அறிவித்துள்ளது. (இ

கணினி திருத்தம்

உங்கள் வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து கணினிகள் லப்டொப்கள் திருத்தி தருகிறோம்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார்

சிசிரிவி கமரா 35000/-

4 சிசிரிவி கமரா + இணைப்புபொருட்கள் + கட்டணம் = 35000/-

GUNA BEST PC 0779086737

522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்

43 பாங்சால் வீதி சந்தை மேல்மாடி சின்னக்கடை யாழ்ப்பாணம்

# விக்கியின் ...
# கோமாளித்த...

"விக்னேஸ்வரனிடம் ஒரு கட்சி இருப்பதாக எனக்குத் தெரியாது. அவர் ஒரு பெயரை அறிவித்திருக்கிறார். அரசியல் கட்சி என்று சொன்னால் பதிவு செய்யப்பட்ட கட்சியாக இருக்கவேண்டும். அப்படி ஒரு கட்சி அவரிடம் இருப்பதாக எங்களுக்குத் தெரியாது. அவர் ஒரு பெயரைச் சொல்லிவிட்டு அது கட்சி என்று சொல்லிக் கொண்டு திரிகின்றார். அதற்கு ஸ்தாபகரும் பொதுச் செயலாளரும் தான் தான் என்று அவரே சொல்கிறார். அதுஎங்கு தெரிவு செய்யப்பட்டதென்று தெரியாது. மாநாடு ஏதும் நடத்தப்பட்டதா, கட்சி உறுப்பினர்கள் ஜனநாயக முறையில் இவரைத் தெரிவு செய்தார்களா. கட்சி உறுப்பினர்கள் எங்கே இருக்கின்றார்கள். அதற்கு ஒரு பட்டியல் உள்ளதா? அது மட்டுமல்ல இந்தக் கட்சிக்குத் தலைவர் யார் என்றுகூட இன்னும் ஒருவருக்கும் தெரயாது. தலைவர் இல்லாத ஒரு கட்சி. ஆகையால் இப்படியான கோமாளித்தனமான செயற்பாடுகளைக் கண்டு நாங்கள் விமர்சிக்க வேண்டிய அவசியம் கிடையாது"

- முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆரம்பித்துள்ள புதிய கட்சி குறித்து இவ்வாறு கருத்துக்களை முன்வைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

அவர் காலைக்கதிர் நாளிதழுக்கு வழங்கிய செவ்வி நேற்றைய இதழில் வெளியாகியிருந்தது. அதன் மிகுதிப்பகுதி இன்று பிரசுரமாகின்றது.

**கேள்வி: புதிய அரசமைப்பு உருவாக்கத்தினூடாக தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்குமென்று சொல்லப்பட்ட நிலையில், இன்று அதன் செயற்பாடுகள் மந்த கதியில் உள்ளன. அப்படியானால் தீர்வு சாத்தியமாகுமா?**

**பதில்:** புதிய அரசமைப்பில் நான் ஏற்கனவே சொன்னது போல மூன்று விடயங்கள் உள்ளன. அதிலே இரண்டு விடயங்களையும் தவிர்த்து புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான பணிகள் தான் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அது சாத்தியம் இல்லாமல் போனாலும் கூட இதுவரை அதாவது மூன்று வருட காலமாகச் செய்த அத்தனை வேலைகளும் முற்று முழுதாகப் பயனற்றுப் போகாத வகையில் பல விடயங்களை நாங்கள் இந்தச் சில மாதங்களுக்குள்ளே செய்யக் கூடியதாக இருக்கும்.

சில அரசமைப்புத் திருத்தங்கள் மூலமாக, சில சாதாரண சட்டங்கள் திருத்தம் மூலமாக பல விடயங்களைச் செய்யக் கூடியதாக இருக்கும். அதையாவது நாங்கள் இந்தக் காலகட்டத்தில் செய்து முடிக்கவேண்டும் என்பது என் சிந்தனை.

**கேள்வி: எதிர்வரும் மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட தேர்தல்கள் வரவிருப்பதாகக் கூறுகின்றீர்கள். ஆனால் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. அதனை நடத்துவதற்கு நீங்கள் அழுத்தங்களைக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளதே?.**

**பதில்:** மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது என்றும் அந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்றும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாங்கள் கோரியே வருகின்றோம். மாகாண சபைத் தேர்தல் எப்படியாக நடத்த முடியுமென்ற ஆலோசனையைக் கூட நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

அதற்கான சட்டவரைவையும் தயாரித்து அதாவது பழைய முறையில் தேர்தலை உடனடியாக நடத்துமாறும் கேட்டிருக்கின்றேன். ஆகையால் மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டுமென்ற எங்கள் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது. அது பழைய முறையில் நடத்தப்படுவதற்கு இலகுவான முறையையும் நாங்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அரசுதான் அதனைச் செய்ய முடியும்.

**கேள்வி: கூட்டமைப்பின் அடுத்த தலைவர் நீங்கள் தான் எனச் சொல்லப்படுகின்றதே. அந்தக் கருத்துக்கள் கட்சிக்குள் எவ்வாறான நிலைப்பாடுகளைத் தோற்றுவித்திருக்கிறது?**

**பதில்:** கட்சிக்குள் அதைப்பற்றி எந்தவிதமான பேச்சும் நடக்கவில்லை. அவ்வாறிருக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தான் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கின்றார். ஏன் அதைச் சொல்லியிருக்கின்றார் என்றும் ஒருவருக்கும் தெரியாது.

அது நல்ல நோக்கோடு சொல்லப்பட்டதா அல்லது தீய நோக்கோடு சொல்லப்பட்டதா என்றுகூட எங்களுக்குத் தெரியாது. அப்படியான தலைமை மாற்றம் என்கின்ற விடயம் தொடர்பில் நாங்கள் ஒருபோதும் பேசியது கிடையாது. எனக்கும் அதைப்பற்றி எந்தவிதமான ஆர்வமும் கிடையாது.

**கேள்வி: தலைமை மாற்றம் குறித்து கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் சிலர் வரவேற்றும் சிலர் எதிர்த்தும் வருகின்றமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில்:** அதைப்பற்றி நான் ஒன்றும் செய்ய இயலாது. நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றமையைப்பற்றியும் பலர் எதிர்க்கருத்தையும் இன்னும் பலர் சாதகமான கருத்தையும் சொல்வார்கள். நான் அரசியலில் இருப்பதைப் பற்றியும் அப்படியான நிலைப்பாடுகள் தான் உள்ளன. ஆனபடியால் தலைமைப் பதவி என்பது ஒரு நாளும் நான் கேட்டதும் இல்லை. அதற்கான ஆர்வமும் இல்லை.

ஓர் அரசமைப்புத் திருத்தம் மூலமாக நீண்டகாலமாக உள்ள தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்ற ஒரேயொரு நோக்கத்துக்காகவே நான் அரசியலுக்கு வந்தேன். அந்த நோக்கம் நிறைவேறுவதற்காகத் தான் எனது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**கேள்வி: இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணவேண்டுமென்ற உங்கள் நோக்கத்துக்கமையச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனக் கூறுகின்றீர்கள். ஆனால் நீங்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளின் அடிப்படையிலான தீர்வை தமிழ் மக்கள் ஏற்கக் கூடியதாக இல்லை என்று சொல்லப்படுகிறதே?**

**பதில்:** தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சிலர் சொல்கின்றார்கள். ஆனால் தமிழ் மக்களிடத்தில் அது என்னவெனக் காட்டப்படவேண்டும். தமிழ் மக்கள் அது சம்பந்தமாகத் தீர்மானிக்க வேண்டும். ஏற்கனவே செய்யப்பட்ட வரைவு தமிழ் மக்களுடைய அடிப்படை அபிலாஷைகளை உள்ளடக்கியதென்பது எனது நிலைப்பாடு.

## நாம் கொண்டு வந்த ஆட்சி மாற்றம் மக்களுக்கு நன்மையையே தந்தது

அப்படியில்லை என்று யாராவது சொன்னால் தேர்தலில் அது சோதிக்கப்படலாம்.

அதே நேரத்தில் செய்யப்படும் அனைத்தும் முழுமையாக ஒரே தடவையில் செய்யப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டையும் நாங்கள் மாற்றவேண்டும். அதைப்பற்றியும் நான் பகிரங்கமாகவும் பேசியிருக்கின்றேன். ஆயுதப் போராட்ட காலத்தில் அது வித்தியாசமான அணுகுமுறை. ஆனால் இந்தச் சூழ்நிலையில் படிப்படியாக முன்னேறுவது சில வேளைகளில் தவிர்க்க முடியாதது.

ஆகையால் இதில் அனைத்தும் கிடைக்கவில்லை என்று சொல்லி அதை நிராகரிக்கின்ற போக்கை நாங்கள் கைவிடவேண்டும். அது ஒருபடி முன்னேற்றமாக இருந்தால் அதனை எடுத்துக்கொண்டு நகர வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

**கேள்வி: தமிழ்க் கட்சிகள் பலவும் பலவிதமான நிலைப்பாடுகளை எடுப்பது போன்று கூட்டமைப்புக்குள்ளேயும் பலரும் பலவிதமான நிலைப்பாடுகளை எடுத்து பலவிதமான கருத்துக்களையே வெளிப்படுத்தி வருகின்றனர். ஏன் ஒருமித்த நிலைப்பாட்டை எடுத்து ஒருமித்த கருத்தை வெளிப்படுத்த முடியவில்லை?**

**பதில்:** ஒருமித்த கருத்தை வைத்தால் அங்கு ஜனநாயகம் இல்லாத சூழ்நிலை காணப்படும். பலருக்கு பல விதமான கருத்துக்கள் இருக்கின்றமைதான் ஜனநாயகம். அதே நேரம் அடிப்படைக் கொள்கைகளில் எந்தவிதமான கருத்து மாற்றங்களும் எவருக்கும் இல்லை. அந்த அடிப்படைக் கொள்கைகளில் கூட்டமைப்புக்கு வெளியே இருக்கிறவர்களில் கூட மாற்று நிலைப்பாடுகள் இல்லை.

அதாவது ஒரே நாட்டுக்குள் தீர்வு என்பதைக் கூட எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். அது எப்படியான தீர்வு என்பதிலும் சமஷ்டி அடிப்படையிலான - சமஷ்டி கட்டமைப்பிலான தீர்வு என்பதையும் எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். அது எங்கள் கட்சிக்கு ஆரம்ப காலத்திலிருந்து உள்ள கொள்கைதான்.

அதற்கு மாறாகச் செயற்பட்ட தமிழ் காங்கிரஸ் கூட இன்றைக்கு சமஷ்டி என்று சொல்கிறது. வெவ்வேறு தீவிரமான நிலைப்பாட்டைக் காட்டுகின்றதாகச் சொல்கின்றவர்கள் கூட சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்றுதான் சொல்கின்றார்கள்.

ஆகையால் அடிப்படை விடயத்தில் கூட்டமைப்புக்குள்ளேயும் கூட்டமைப்புக்கு வெளியேயும் கூட மாற்றுக் கருத்துக் கிடையாது. கொள்கையில் ஒன்றாகத்தான் இருக்கின்றார்கள். ஆனால் அணுகுமுறை பிழை என்று சொல்லுகின்றார்கள். இப்படிச் செய்வது தவறு என்று சொல்கின்றார்கள். வித்தியாசமாக அணுகவேண்டும் என்று சொல்கின்றார்கள். ஆனபடியால் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்று சர்வதேசத்தில் கேள்வி எழுகின்றபோது ஒரே நிலைப்பாடு தான் இன்று உள்ளது.

**கேள்வி: வடக்கு ஆளுநர் தொடர்பில் அண்மைய நாள்களில் விமர்சனங்களை முன்வைக்கின்றீர்கள். அது அரசியல் நோக்கம் கொண்டதாகச் சொல்லப்படுகிறதே**

**பதில்:** வடக்கு மாகாண ஆளுநர் என்று ஒருவரை நான் விமர்சிக்கமாட்டேன். ஒவ்வொரு செயற்பாடுகள் சம்பந்தமாகக் கருத்துக்களைக் கேட்டால் நான் சொல்லக் கூடியதாக இருக்கும். இந்த நாட்டில் இரண்டு தேசங்கள் உள்ளன என்ற அடிப்படைக் கருத்தைக் கொண்டவர் இந்த ஆளுநர்.

ஆகவே அவர் ஜனாதிபதியின் பிரதிநிதியாக இருந்தாலும்கூட தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் நிலைப்பாட்டை முழுமையாக ஏற்றுக் கொண்ட ஒருவர். இன்று அதனை வெளிப்படையாகச் சொல்லும் ஒருவர். அப்படியான ஒருவர் ஆளுநராக இருக்கின்றமை நல்ல விடயம். ஆனால் அது அவருடைய நிலைப்பாடாக இருந்தாலும் அவருடைய செயற்பாடுகள் எங்கள் மக்களுக்குச் சாதகமானதாக இருக்கின்றதா அல்லது பாதகமானதாக இருக்கின்றனவா என்று ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு செயற்பாட்டையும் பார்த்துத்தான் நாங்கள் செயற்பட முடியும். அவருடன் இணைந்து நாங்கள் எங்கள் இறுதி இலக்கை அடைய முடியுமாக இருந்தால் அது வரவேற்கத்தக்க ஒரு விடயம்.

இவருக்கு முன் இருந்த ஆளுநரும் அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவளித்த ஒருவர். அதற்காகத் தாக்கப்பட்டு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஒருவர். ஆனாலும் அவரையும் விட இந்த ஆளுநர் கூடுதலான எங்கள் நிலைப்பாட்டோடு சேர்ந்திருக்கின்ற ஒருவர். இந்த நாட்டில் இரண்டு தேசங்கள் உள்ளன என்று சொல்கின்ற ஒருவர். ஆகவே அவருடைய அரசியல் நிலைப்பாடு எங்களுக்குச் சாதகமான ஒரு நிலைப்பாடு ஆகும். ஆனால் செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் நாங்கள் அந்தந்த வேளையில் பார்த்துக் கொள்ளவேண்டும்.

**கேள்வி: நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ள நிலையில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து விவரங்களை வெளிப்படுத்தவில்லையே. அவ்வாறு வெளிப்படுத்தியவர்கள் முழுமையான விவரங்களை வெளிப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றதே?**

**பதில்:** சொத்து விவரங்களை நாங்கள் முழுமையாகவே தான் வெளிப்படுத்தியிருக்கின்றோம். சிலர் வங்கிக் கணக்கு இலக்கத்தை அழித்துவிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். வங்கிக் கணக்கு இலக்கம் இரகசியமானது. அதனை வெளிப்படுத்தவேண்டாம். அதனை மறைத்துவிட்டு வெளிப்படுத்துமாறு எனக்கும் அந்த ஆலோசனை சொல்லப்பட்டது. ஆனால்



நான் அப்படிச் செய்யவில்லை. அதனா...
என்னுடைய வங்கிக் கணக்கு இலக்க...
எல்லாம் வெளிப்படையாக வந்திருக்கிற...
நாங்கள் சொத்து வெளிப்படுத்துதல் என்பதி...
ஒவ்வொரு வருடமும் வெளிப்படுத்தும் சொத்...
விவரங்களும் இருக்கும். அதிலும் முதலி...
வெளிப்படுத்திய சொத்துவிவரமும் சேர்ந்...
தான் வரும்.

அதற்கமைய நான் எனது சொத்து வி...
ரத்தை கடந்த 2010 ஆம் ஆண்டு முதற்தட...
யாக வெளிப்படுத்தியிருக்கிறேன். இப்போ...
2019 ஆம் ஆண்டு மீண்டும் வெளிப்படுத்...
யுள்ள நிலையில், கடந்த 2010 ஆம் ஆண்...
2019 ஆம் ஆண்டு என என சொத்து விவர...
கள் இரண்டு நிரல்களில் இருக்கும்.

அரசியலுக்கு வருகின்றபோது இருந்...
சொத்து எவ்வளவு? இப்போது உள்...

## கூட்டமைப்பி... ஆர்வம் என்...

சொத்து எவ்வளவு? என்பதை ஒரே நேரத்தி...
பார்க்கக்கூடியதாக இருக்கும். அதை...
தான் நாங்கள் வெளிப்படுத்தியிருக்கிறோ...
எங்களைப் போன்றவர்கள் அரசியலுக்...
வரும்போது இருந்த சொத்தை விட இப்போ...
சொத்து குறைவாகத்தான் இருக்கிறது. அர...
யலுக்கு வந்தது எங்களுக்கு நட்டம் என்ப...
அந்தச் சொத்து விவரக் கோவைகளை...
பார்க்கின்றவர்களுக்குத் தெரியும்.

தமது சொத்து விவரங்களை வெளிப்படு...
தாதவர்கள் தயவு செய்து அதனைப் பகிர...
கப்படுத்துங்கள். இதனுடைய நோக்கமே ம...
களுக்குத் தெரியவேண்டுமென்பதுதா...
அதை இந்த வருடம் ஜூன் 30ஆம் திகதி எ...
கள் விவரக் கோவைகளை அனுப்பிய பிற...
நாடாளுமன்றத்தில் இந்த ஐந்து பேருட...
தற்போது இன்னொருவர் சேர்ந்துள்ள...
யால் நாங்கள் ஆறு பேரும் திரும்ப அதனை...
வெளிப்படுத்துவோம். அந்த வேளையி...
நீங்களும் வெளிப்படுத்துங்கள் என்று ம...
ற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு...
பகிரங்கமாக அழைப்பு விடுப்போம்.

எனது கணிப்பின்படி இருபது முத...

# செயற்பாடுகள் ...தனமானவை!



முப்பது பேராவது எங்களோடு சேர்வார்கள் என்று நினைக்கின்றேன். ஆனாலும் வெளிப்படுத்தாதவர்கள் குறித்து மக்கள்தான் தீர்மானங்களைஎடுத்துக்கொள்ளவேண்டும். அதாவது ஏன் அவ்வாறு தமது சொத்து விவரங்களைப் பகிரங்கப்படுத்தப்பயப்படுகிறார்கள் என்று மக்கள் முடிவெடுக்கலாம்.

**கேள்வி: ஜெனீவா அமர்வு ஆரம்பமாகியுள்ள நிலையில் இங்கை விவகாரம் தொடர்பில்தற்போது பலவிதமான நிலைப்பாடுகள் குறித்தும் பேசப்படுகிறதே?**

**பதில்:** கால அவகாசம் என்பது ஒரு பிழையான சொற்பிரயோகம். இலங்கை சில விடயங்களை நல்லிணக்கம் சம்பந்தமாகவும் பொறுப்புக் கூறல் சம்பந்தமாகவும் நிரல்படுத்தி, தாம் இந்த விடயங்களைச் செய்வோம் என்று சொல்லியுள்ளது. அதைச்

## ...ன் தலைவராகும் ...ிடம் கிடையாது

செய்வதற்கு முதலாவது தீர்மானத்திலோ அல்லது இரண்டாவது தீர்மானத்திலோ ஒரு கால எல்லை கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால் ஒரு நியாயமான காலத்துக்குள்ளே இவைகள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா இல்லையா என்ற மேற்பார்வை செய்வதற்கு மனித உரிமை ஆணையாளருக்கு ஓர் ஆணை கொடுக்கப்பட்டிருந்தது. அதாவது முதல் ஒன்றரை வருடங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. 34/1 என்ற தீர்மானத்தின் பிரகாரம் இன்னும் இரண்டு வருடத்துக்கு காலம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு வருட காலமும் இப்போது நிறைவடைகின்றது.

அது நிறைவடைந்த பிறகு ஒன்றுமே நடக்காவிட்டால் அதற்குப் பிறகு மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை சம்பந்தமாக ஒரு விடயத்தையும் கையாள முடியாது. இன்னொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மனித உரிமை ஆணையாளருக்கு கொடுக்கும் இந்த ஆணை புதுப்பிக்கப்பட வேண்டும். அது சர்வதேச மேற்பார்வையை நீடிக்கின்ற ஒரு செயற்பாடு. அது புதுப்பிக்கப்படாவிட்டால் இலங்கை செய்ததா செய்யவில்லையா

> சர்வதேசத்தின் பார்வை இலங்கையை விட்டு முற்றாக விலகிவிடும். ஆகையால் தான் தான் நாங்கள் தொடர்ச்சியாகச் சொல்லவது என்னவெனில், கால அவகாசம் கொடுப்ப தென்று கூறுவது ஒரு தவறான கருத்து. அதை மக்களிடம்சொல்லி மக்களையும் குழப்பி ஏதோ அரசுக்குச் சார்பாக இது செய்யப்படுகின்றது என்ற பொய்யான விளக்கத்தையும் பலர் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதை நம்ப வேண்டாம். இது சர்வதேச மேற்பார்வை. கட்டாயமாக நீடிக்கப்படவேண்டிய ஒன்று. அதை நீடிப்பதற்கான செயற்பாட்டை நாங்களும் செய்யவேண்டும். இலங்கை அரசு கடந்த இரண்டு தடவை இணை அனுசரணை கொடுத்திருக்கின்றது. இந்தத் தடவையும் அதைக் கொடுக்க வேண்டுமென்பதே எங்கள் நிலைப்பாடு. அதைக் கொடுப்பதாக வாக்குறுதியையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஜனாதிபதி அதிலிருந்து தப்பிக்க இப்போது முனைகிறார்.

என்ற அறிக்கைகூட வராது.

சர்வதேசத்தின் பார்வை இலங்கையை விட்டு முற்றாக விலகிவிடும். ஆகையால்தான் தான் நாங்கள் தொடர்ச்சியாகச் சொல்லவது என்னவெனில், கால அவகாசம் கொடுப்பதென்று கூறுவது ஒரு தவறான கருத்து. அதை மக்களிடம்சொல்லி மக்களையும் குழப்பிஏதோ அரசுக்குச் சார்பாக இது செய்யப்படுகின்றது என்ற பொய்யான விளக்கத்தையும் பலர் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதை நம்ப வேண்டாம்.

இது சர்வதேச மேற்பார்வை. கட்டாயமாக நீடிக்கப்படவேண்டிய ஒன்று. அதை நீடிப்பதற்கான செயற்பாட்டை நாங்களும் செய்யவேண்டும். இலங்கை அரசு கடந்த இரண்டு தடவை இணை அனுசரணை கொடுத்திருக்கின்றது. இந்தத் தடவையும் அதைக் கொடுக்க வேண்டுமென்பதே எங்கள் நிலைப்பாடு. அதைக் கொடுப்பதாக வாக்குறுதியையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஜனாதிபதி அதிலிருந்து தப்பிக்க இப்போது முனைகிறார்.

ஜனாதிபதியும் புதிய தீர்மானம் வேண்டாம் என்று சொல்கிறார். தமிழர் தரப்பில் இருக்கக்கூடிய போலித் தேசியவாதிகளும் அதே போன்று தான் சொல்கின்றார்கள். அப்படியாக அவர்கள் இரண்டு பேரும் சர்வதேச மேற்பார்வை வேண்டாமென்று சொல்கின்றனர். அப்படியான ஒரு சதிப் பொறிக்குள் எங்கள் மக்கள் சிக்கக்கூடாது.

**கேள்வி: வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் ஒரு கட்சியை ஆரம்பித்துள்ளார். அவர் புதியதொரு கூட்டையும் அமைக்க உள்ளார் எனச் சொல்லப்படுகின்றது. அவ்வாறாகப் புதியதொரு கூட்டு உருவாகினால் எதிர்வரும் தேர்தல்களில்தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு அது பாதிப்பாக அமையுமா?**

**பதில்:** ஒரு கட்சி அவரிடத்தில் இருப்பதாக எனக்குத் தெரியாது. அவர் ஒரு பெயரை அறிவித்திருக்கிறார். ஆனால் அரசியல் கட்சி ஒன்று இருப்பதாக எவருக்கும் தெரியாது. அரசியல் கட்சி என்று சொன்னால் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக இருக்கவேண்டும். அப்படி ஒரு கட்சி அவரிடம் இருப்பதாக எங்களுக்குத் தெரியாது. நாளைக்கு எவரும் ஒரு பெயரைச் சொல்லலாம். அவ்வாறு அவரும் ஒரு பெயரைச் சொல்லிவிட்டு அது கட்சி என்று சொல்லிக் கொண்டு திரிகின்றார். அதற்கு ஸ்தாபகரும் பொதுச் செயலாளரும் தான் தான் என்று அவரே சொல்கிறார். அது எங்கு தெரிவு செய்யப்பட்டதென்று தெரியாது. மாநாடு ஏதும் நடத்தப்பட்டதா, கட்சி உறுப்பினர்கள் ஜனநாயக முறையில் இவரைத் தெரிவு செய்தார்களா, கட்சி உறுப்பினர்கள் எங்கே இருக்கின்றார்கள், அதற்குஒருபட்டியல்உள்ளதா? அதுமட்டுமல்ல இந்தக் கட்சிக்குத் தலைவர் யார் என்றுகூட இன்னும் ஒருவருக்கும் தெரியாது. தலைவர் இல்லாத ஒரு கட்சி. ஆனால் உண்மையிலேயே அது கட்சிகூடக் கிடையாது. ஆகையால் இப்படியான கோமாளித்தனமான செயற்பாடுகளைக் கண்டு நாங்கள் விமர்சிக்கவேண்டிய அவசியம் கிடையாது.

**கேள்வி: கூட்டமைப்பின் மீது குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்ற நிலையில் எதர்வரும் தேர்தல்களை கூட்டமைப்பாக எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றீர்கள்?**

**பதில்:** மக்களுடைய அரசியல் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் தொடர்ந்து மக்களுக்கு அந்தப் பிரதிநிதித்துவத்தை கொடுப்போம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் நாங்கள் எடுத்துக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றித்தான் மக்களிடம் செல்ல முடியும். ஆனபடியினால்தான் இந்த முக்கியமான அரசியல் தீர்வு சம்பந்தமான நிலைப்பாட்டில் நாங்கள் கொடுத்த வாக்குறுதியின் பிரகாரம் அதனை அடைவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறோம்.

**கேள்வி :நீங்கள் இவ்வாறு கூறினாலும் கூட்டமைப்பின் கடந்த கால செயற்பாடுகளினால் கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வீழ்ச்சி ஏற்பட்டதாகக் கூறப்படும் நிலையில் அடுத்து வரும் தேர்தல்களில் அதிலிருந்து மீளமுடியுமென நினைக்கிறீர்களா?**

**பதில்:** உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் உள்ளன. ஆனால் அடுத்த தேர்தலில் அது அனைத்தும் சீர் செய்யப்படும். ஏற்கனவே அந்த வீழ்ச்சியில் இருந்து நாங்கள் மேலெழும்பத் தொடங்கிவிட்டோம் என்பது தான் என்னுடைய சிந்தனை.

**கேள்வி: கூட்டமைப்பு அரசுக்கு முண்டு கொடுத்து அரசைக் காப்பாற்றி வருகின்றதாகக் குற்றச்சாட்டு உள்ளது. அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பான ஒருவராகவும் உங்களைச் சித்திரிக்கப்படுகின்றதே?**

**பதில்:** இந்த அரசுக்கு நாங்கள் முண்டு கொடுக்கவேண்டிய தேவை இருக்கிறது. இல்லாவிட்டால் ஒக்ரோபரில் நடந்தது உடனடியாக இப்போது நடக்கும். அது தமிழ் மக்களுக்குப் பயங்கரமான ஒரு விளைவை ஏற்படுத்தும். ஆனபடியால் தான் நாங்கள் அதனைச் செய்து கொண்டிருக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்காக நாங்கள் செயற்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகவும் செயற்படவில்லை. எங்கள் மக்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதன் வெளிப்பாடாகத்தான் இதனைச் செய்து கொண்டிருக்கிறோம்.

என்னைப் பொறுத்தவரை இந்த அரசமைப்பு உருவாக்கப் பணிகளில் வழிநடத்தல் குழுவில் நான் ஓர் அங்கத்தவராக இருக்கிறேன். வழிநடத்தல் குழுவில் ஒரு முக்கிய பொறுப்பான பதவி எனக்கும் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ணவுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆகையால் வழிநடத்தல் குழுக் கூட்டங்கள் சம்பந்தமான ஒவ்வொரு கூட்டங்களுக்கும் வழிநடத்தல் குழுவின் தலைவராக உள்ள பிரதமரோடு பேசித்தான் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் செய்யவேண்டி உள்ளது.

அந்த விடயங்கள் சம்பந்தமாக பிரதமரோடு மிகவும் நெருங்கி நான் செயற்பட்டிருக்கிறேன். இன்றும் நான் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். அதைப்போல இப்போது ஜனாதிபதி ஒரு குழுவை தானாக நியமித்திருக்கின்றார். அதில் என்னையும் அவர் தான் நியமித்திருக்கின்றார். அந்த விடயத்தில் ஜனாதிபதியுடனும் மிக நெருக்கமாக நான் செயற்படுவேன். யாரோடு நெருக்கமாக செயற்படுவது என்பதல்ல கேள்வி. எதற்காக அதைச் செய்கிறோம் என்பதுதான் கேள்வி. புதிய அரசமைப்பை உருவாக்குவதவற்கு – தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கான தீர்வை அடைவதில் எவரோடும் நெருங்கிச் செயற்படுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

## ரணிலோடு இன்றும் கூட நான் நெருக்கமுடனேயே செயற்படுகிறேன்!

**கேள்வி: இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அல்லது விமர்சனங்களுக்கு மத்தியில் எதிர் காலத்தில் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளீர்கள்?**

**பதில்:** அரசியல் தீர்வைப் பெறுவதற்கான இலக்கு தான் என்னுடைய மனதில் பிரதான விடயமாக இருக்கிறது. இந்த ஒரு இலக்கை நோக்கித் தான் எல்லாச் செயற்பாடுகளும் இருக்கும்.

**கேள்வி: உங்கள் இலக்கை அடைய முடியாவிட்டால் அரசியலில் இருந்து ஒதுங்குவதாகக் கூறியிருந்தீர்கள். இப்போது அந்த நிலைப்பாட்டில் எத்தகைய எண்ணத்தைக் கொண்டுள்ளீர்கள்?**

**பதில்:** அந்த இலக்கை அடைவதுதான் ஒரே ஓர் இலக்கு. ஆனாலும் இனி அதைச் செய்ய முடியாத நிலைப்பாடு அதாவது தீர்வு வர முடியாதென்ற நிலை வருமாக இருந்தால் நிச்சயமாக நான் அரசியலை விட்டுஒதுங்குவேன். அதுசெய்து முடிந்தாலும் நான் செய்ய வந்த காரியம் செய்து முடிந்து விட்டதென்று நான் விலகுவேன்.

அது நான் அடிக்கடி சொல்லி வருகின்ற விடயம். ஆனால் அதைச் முடியாமல் போய் விட்டதே என்று தீர்மானிப்பது நானாகத் தான் இருக்கும். அப்படியான ஒரு சூழ்நிலை வரும். ஆனால் இன்றும் அப்படியான ஒரு முடிவை நான் எடுக்கவில்லை.

ஒக்ரோபரில் இங்கு குழப்பங்கள் வந்த போது எல்லாம் குழம்பிவிட்டது என்று பலர் தீர்மானித்துவிட்டார்கள். ஆனால் நான் அவ்வாறான தீர்மானத்தை எடுக்கவில்லை. இப்போதும் அதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

**கேள்வி:** இந்த நாடாளுமன்றக் காலம் முடிய இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் உங்கள் இலக்கு அடையக்கூடியதாக இருக்குமெனக் கருதுகின்றீர்களா?

**பதில்:** இந்த நாடாளுமன்றக் காலத்தில் குறிப்பிட்ட சில மாதங்கள் தான் இருக்கின்றன. அதற்குள் செய்யக் கூடியதை நாங்கள் செய்வோம். அந்தக் காலத்திற்குள் இலக்கை அடைவதற்காகத்தான் நான் முயற்சி செய்கிறேன். ஆனால் அதற்குள் இலக்கை அடையாவிட்டாலும் இப்பொழுது செய்யப்படக் கூடிய முயற்சிகள் தொடர்ந்தும் இருக்கும்.

(முற்றும்)

# தெற்கு மக்களின் நிலங்களை கேட்கவில்லை தமிழ் மக்கள்!

## சொந்த மண்ணையே கோருகின்றனர் என்கிறார் சாந்தி சிறிஸ்கந்தராசா எம்.பி.



கொழும்பு, மார்ச் 16

**வடக்கு- கிழக்கில் உள்ள மக்கள் தென்பகுதி மக்களின் இடங்களை கேட்கவில்லை. மாறாக தமது சொந்த நிலங்களையே அவர்கள் கோருகின்றனர். அவற்றைப் பெற்றுக்கொடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ் கந்தராசா கோரிக்கை விடுத்தார்.**

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வாய்மொழிமூல கேள்விக்கான பதில் நேரத்தில் அவர் இவ் விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் தென்பகுதி மக்களின் இடங்களைக் கேட்கவில்லை. மாறாக தமது சொந்த நிலங்களையே அவர்கள் கோருகின்றனர். இதனை பெற்றுக்கொடுப்பதற்கு அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு வடக்கில் தொழிற்சாலை அமைக்கவேண்டும். குறிப்பாக தற்போது வடக்கில் தொழிற்சாலைகள் இல்லாதமை காரணமாக தென்பகுதி மக்களே அதிக இலாபங்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

ஆகவே வடக்கு – கிழக்கில் உள்ள மக்களும் பயனடையும் விதமாக அங்கு தொழிற்சாலைகளை நிறுவவேண்டும். இதன் மூலம் வேலையில்லாத பலரின் பிரச்சினைக்கு இது ஒரு தீர்வாக அமையும்.

அத்தோடு பல பகுதிகளில் வீதிகள் புனரமைப்பின்றிக் கிடக்கின்றன. அவை அனைத்தும் புனரமைக்கப்படவேண்டும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கூட்டறவுச் சங்கங்கள் இன்றுவரை புனரமைக்கப்படாமல் இருக்கின்றன அவை அனைத்தையும் மீள கட்டியெழுப்புதல் அவசியமானதாகும். இதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைச் சரியான முறையில் கையாண்டு, வடக்கு – கிழக்குப் பகுதியில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளவேண்டும் – என்றார். (ஐ)

## ஓமந்தையில் திடீர் சோதனை தடுமாறுகின்றனர் பயணிகள்!



வவுனியா, மார்ச் 16

ஏ 9 வீதியில், ஓமந்தை ரயில் நிலையம் முன்பாக வழித்தடை ஏற்படுத்தி பொலிஸார் திடீரென வாகனங்கள் மற்றும் உடைமைகளைச் சோதனையிட்டு வருவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஏன் திடீரெனச் சோதனை இடுகிறீர்கள் எனக் கேட்டால், எந்தவித பதிலும் சொல்லாமல் பொலிஸார் சோதனையில் ஈடுபடுகின்றனர். இதனால், மக்கள் பல மணி நேரம் தாமதமாகப் பயணிக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. (ஐ)

## இளம் தாயார் தீ மூட்டி உயிர் மாய்க்க முயற்சி!

### தெய்வாதீனமாக ஒன்றரை வயதுக் குழந்தை மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் கலந்து தனக்குத் தானே தீவைத்து உயிரை மாய்க்க முயன்றார் என்று தெரிவித்து ஒன்றரை வயதுக் குழந்தையின் தாயார் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் தனது குழந்தையையும் அழைத்துச் சென்று அடர்ந்த பற்றைக்குள் இவ்வாறு தனக்குத் தானே தீவைத்தார். எனினும் குழந்தையுடன் அவர் பற்றைப் பகுதிக்குள் ஓடிச் செல்வதை அவதானித்த அயலவர்கள் விரைந்து செயற்பட்டமையால் அவரது ஒன்றரை வயதுக் குழந்தை எந்தவொரு பாதிப்புமின்றிக் காப்பாற்றப்பட்டது என வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி விசுவமடுவைச் சேர்ந்த பிரசாந்தன் மேனகா (வயது - 20) என்ற இளம் தாயாரே இவ்வாறு உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றது. உடனடியாக அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவரது உடலில் 80 சதவீதம் தீக்காயங்கள் ஏற்பட்டமையால் சுவாசிப்பதில் பாதிப்பு ஏற்பட்டது.

அதனால் இளம் தாயார் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவருக்குச் செயற்கை சுவாசம் வழங்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

குடும்பத் தகராறே காரணம் என ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலராக நேற்று முதல் அகிலன் நியமனம்



முல்லைத்தீவு, மார்ச் 16

ஒட்டுசுட்டான் பிரதேச செயலராக தனபாலசிங்கம் அகிலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் அங்கு பிரதேச செயலர் இல்லாமையால் உதவிப் பிரதேச செயலர் இ.ரமேஷ் தலைமையில் மக்களுக்கான சேவைகள் திறம்பட நடைபெற்று வந்தன.

ஆயினும் பிரதேச செயலர் மேற்கொள்ளவேண்டிய சில தேவைகளுக்காக மக்கள் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலரின் பதில் கடமைக்காகக் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

இந்நிலையில் நேற்று முதல் புதிய பிரதேச செயலாளர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாண மாவட்டப் பிரதித் தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றிய தனபாலசிங்கம் அகிலன் நேற்று முதல் பிரதேச செயலாளராகக் கடமையை பொறுப்பேற்றார். (ஐ)

## மதூஷை இலங்கைக்கு கொண்டு வரவேண்டாம்!

### உயர் நீதிமன்றத்தில் மனு

கொழும்பு, மார்ச் 16

டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள பாதாள உலகத் தலைவன் மாகந்துர மதூஷை கைது செய்வதை தடுக்குமாறு இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாகந்துர மதூஷின் தாயின் சகோதரியான சூரியவெவ பகுதியைச் சேர்ந்த ஏ.டபிள்யூ சிறியானி என்பவரே இவ்வாறு மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ் விடேஅதிரடிப்படையின் பிரதி பொலிஸ் மா அதிபர், பொலிஸ் மா அதிபர் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட ஐவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது வெளிநாட்டில் உள்ள மாகந்துர மதூஷ் என்பவரை கைது செய்வதற்குப் பொலிஸார் அடிப்படையற்ற விதத்தில் செயற்படுகின்றனர் என மனு தாரர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அவரது அடிப்படை உரிமை மீறப்படுவதாக தீர்ப்பளிக்குமாறும் மதூஷை கைது செய்வதைத் தடுக்குமாறு தடை உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## கச்சதீவில் நேற்றுக் குவிந்தனர் பக்தர்கள்!




யாழ்ப்பாணம், மார்ச் 16

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இன்று இடம்பெற உள்ள நிலையில் பக்தர்கள் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் நேற்று அங்கு குவிந்தனர்.

நேற்று குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து காலை 7.45 மணியளவில் முதலாவது படகுச்சேவை ஆரம்பமானது.

மேற்படி ஆலய வருடாந்த திருவிழாவுக்கான பயண ஏற்பாடுகளை கடற்படையினர் மேற்கொண்டிருந்தனர். 100க்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் அப்பகுதியில் ஈடுபடுவதற்காக வடதாரகை படகு மூலம் அங்கு சென்றனர்.

இலங்கையைச் சேர்ந்த 7 ஆயிரம் வரையான பக்தர்களும் இந்தியாவிலிருந்து 2 ஆயிரத்து 200 பேர் வரையிலும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.


இந்த உற்சவத்திற்காக மக்களின் நலன் கருதி நேற்று அதிகாலை 3.30 மணிமுதல் யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்திலிருந்து பஸ்கள் குறிகாட்டுவானை நோக்கிப் புறப்பட்டன. அந்தச் சேவைகள் முற்பகல் 10.30 மணிவரை தொடர்ந்து நடைபெற்றன.

அதேபோன்று இன்று காலை முதல் குறிகாட்டுவானிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான விசேட பஸ் சேவைகள் நடத்தப்படும்.

ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் நலன் மற்றும் வசதி கருதி கூடுதலான பஸ் சேவைகள் ஒழுங்குபடுத்தப்படுவதோடு குறிகாட்டுவானிலும் நீர் மலசல கூட வசதிகளுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. திருவிழாத் திருப்பலி இன்று காலை இடம்பெறவுள்ளது. (ஐ)

# நியூஸிலாந்தில் நேற்று வெள்ளி தொழுகை சமயம் மசூதிகளுக்குள் கண்மண் தெரியாமல் துப்பாக்கிச் சூடு

## 49 பேர் வரை பலி; மேலும் பலர் படுகாயம்; பதற்ற நிலை நீடிப்பு



நியூஸிலாந்தின் கிரைஸ்ட் சேர்ச் நகரில் உள்ள ஓர் மசூதிகளில் நேற்று நண்பகலில் மர்ம நபர்கள் திடீரென நுழைந்து கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதில் பலர் கொல்லப்பட்ட நிலையில், முதல் கட்டத் தகவலில் 10பேர் வரை உயிரிழந்தனர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூடு நடந்த மசூயில் தொழுகைக்காக பங்களாதேஷ் கிரிக்கெட் அணியினர் செல்ல முயன்றபோது, இந்தத் தாக்குதல் நடந்தது. அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள்.

நியூஸிலாந்தின் கிரைஸ்ட் சேர்ச் நகரில் டீன்ஸ் அவ் பகுதியில் ஹெக்லி பார்க் அருகே மிகப்பெரிய மசூதி இருக்கிறது. இந்த மசூதியில் நேற்று வெள்ளிக்கிழமை என்பதால், நண்பகல் தொழுகை நடந்தது. ஏறக்குறைய 200க்கும் மேற்பட்டோர் தொழுகை நடத்திக் கொண்டிருந்தனர்.

அப்போது, திடீரென நுழைந்த மர்ம நபர் ஒருவர் தொழுகை நடத்திக் கொண்டிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினார். இதனால், தொழுகையில் ஈடுபட்டிருந்த மக்கள் பலர் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அலறியடித்துக்கொண்டு வெளியே ஓடினார்கள். பலர் தரையில் படுத்துக்கொண்டனர். ஆனால், துப்பாக்கிச் சூடு 10 முதல் 15 நிமிடங்கள் வரை நீடித்ததாக அதை நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர். இதைபோன்று கிறிஸ்ட் சேர்ச்சில் உள்ள மற்ற மசூதிகளிலும் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டனர் என முதல் கட்டத் தகவல் தெரிவிக்கிறது. ஆனால், மிகப்பெரிய தாக்குதலாக இருக்கிறது என்பதால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிறிஸ்ட் சேர்ச் நகரில் பதற்றமான சூழல் நிலவுவதால், பள்ளி, கல்லூரிகளை மூடி யாரையும் வெளியே அனுப்ப வேண்டாம் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர். மேலும், பள்ளி சென்ற குழந்தைகளை அழைத்து வர பெற்றோர்கள் வெளியேற வேண்டாம்என்றுஎச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து பொலிஸார் தரப்பில் கூறுகையில், இந்தப் பதற்றமான சூழலைச் சமாளிக்க முடியும், ஆனால், பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எத்தனை இடங்களில் இதுபோன்று துப்பாக்கிச் சூடு நடக்கிறது எனத் தெரியவில்லை. கிறிஸ்ட் சேர்ச் நகரில் கடைகள்,வணிக வளாகங்கள், நூலகம் அனைத்தையும் மூட உத்தரவிட்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே துப்பாக்கிச் சூட்டை நேரில் பார்த்த ஒருவர் கூறுகையில், "துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் நான் திரும்பிப் பார்த்த போது என் மனைவி குண்டுக் காயம் பட்டுதரையில் விழுந்தார், குழந்தைகள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஆனால், என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நான் என்மீது உடல்களைப் போட்டுக்கொண்டு தப்பித்தேன். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் ராணுவ உடை அணிந்திருந்தார். மசூதியில் எங்கு பார்த்தாலும் ரத்த வெள்ளமாக இருந்தது எனத் தெரிவித்தார்.

நியூஸிலாந்தின்கடற்கரையோர நகரமானகிரைஸ்ட் சேர்ச்சிலுள்ள இருவேறு மசூதிகளில் துப்பாக்கித்தாரிகள் நடத்திய தாக்குதலில் 49 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டுபிரதமர் ஜெசிந்தா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். முன்னதாக, கிரைஸ்ட்சர்ச்சில் உள்ள அல் நூர் என்னும் மசூதியில் துப்பாக்கிச்சூடு நடந்து வருவதாக உள்ளூர் ஊடகங்கள் நேற்றுக் காலை செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த தாக்குதல் இரண்டு மசூதிகளில் நடைபெற்றமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்த குறிப்பிட்ட பகுதிக்கு செல்வதை தவிர்க்குமாறு காவல்துறையினர் பொது மக்களை எச்சரித்தனர்.

இது நியூசிலாந்தின் கறுப்பு தினங்களில் ஒன்றாக இருக்கும் என்று அந்நாட்டின் பிரதமர் ஜெசிந்தா தெரிவித்துள்ளார்.

இன்னும் எத்தனை துப்பாக்கித்தாரிகள் உள்ளனர் என்பது இறுதி செய்யப்படவில்லை என்றாலும், துப்பாக்கி தாரிகளில் ஒருவர் ஆஸ்திரேலியர் என்பதும், அவர் குடியேற்றத்துக்கு எதிரான கொள்கையை கொண்டவர் என்றும் கூறப்படுகிறது.

மேலும், இந்தத் துப்பாக்கி தாரி தாக்குதல் தொடுக்கும்போது எடுத்ததாகக்கூறப்படும் காணொலி ஒன்று சமூக ஊடகங்களில் பரவி வருகிறது. இந்நிலையில், இந்த உறுதிப்படுத்தப்படாத, கவலையேற்படுத்தக்கூடிய காணொலியை யாரும் பகிர வேண்டாமென்று அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது. கிரைஸ்ட் சேர்ச்சில் உள்ள பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன என அந்நகர காவல் துறை ஆணையர் மைக் புஷ் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கி தாரியிடமிருந்து தப்பிப்பதற்காக தாங்கள் அவ்விடத்தை விட்டு ஓடி வந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

முதலில் நாங்கள் மின்சார ஒக் என்று நினைத்தோம். பிறகு சூழ்நிலையை புரிந்து கொண்டு அனைவரும் அங்கிருந்து ஓடத் தொடங்கினோம் என்று சம்பவ இடத்திலிருந்துதப்பித்தமோஹான் இப்ராஹிம்என்பவர்நியூசிலாந்து ஹெரால்டிடம்தெரிவித்துள்ளார்.

என்னுடைய நண்பர்கள் இன்னமும் அங்குதான் உள்ளனர். கூட்டநெரிசல்அதிகம் இருந்ததால் என் நண்பர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று பயமாக உள்ளது.

கிரைஸ்ட் சேர்ச் நகரத்தின் மைய பகுதியில் அமைந்துள்ள இந்த மசூதியில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டிலிருந்து தப்பித்தவர்கள், நிகழ்விடத்தில் இறந்த உடல்களை பார்த்ததாக கூறினாலும், அது இன்னும் காவல்துறையினரால் உறுதிப்படுத்தப்படவில்லை.

துப்பாக்கிச்சூடு நடைபெற்று வரும் பகுதிக்கு அருகேயுள்ள கதீட்ரல் சதுக்கம் என்ற இடத்தில் பருவநிலை மாற்றம் குறித்த பேரணியை நடத்தி வந்த ஆயிரக்கணக்கான சிறுவர்களை காவல்துறையினர் அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிரைஸ்ட் சேர்ச்சில் நிலவி வரும்சூழ்நிலையைகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு காவல்துறையினர் முழு வீச்சில் செயல்பட்டாலும், நிலைமை இன்னும் அபாயகரமானதாகவே உள்ளது என்று நேற்று அந்நகர காவல் துறை ஆணையர் மைக் புஷ் தெரிவித்துள்ளார்.

மறு அறிவிப்பு வரும்வரை கிரைஸ்ட் சேர்ச் நகரவாசிகள் தங்களது வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கிரைஸ்ட் சேர்ச்சின் ஹாகிலே பூங்காவுக்கு அருகிலுள்ள மற்றொரு மசூதியில் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டிலிருந்து, நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளபங்களாதேஷ்கிரிக்கெட்அணியினர்பத்திரமாக வெளியேறிவிட்டார்கள் என பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் மசூதித் துப்பாக்கிச் சூட்டில் அருந்தப்பு



மசூதியில் இருந்து தப்பி ஹோட்டலுக்கு வந்த பங்களாதேஷ் அணி வீரர்கள்

நியூஸிலாந்தின் கிறிஸ்ட் சேர்ச் நகரில் மசூதியில் நேற்று நடந்த பயங்கரத் துப்பாக்கிச் சூட்டில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி யினர் மசூதியில் இருந்து ஹோட்டலுக்கு ஓடி உயிர் தப்பினர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கிறிஸ்ட் சேர்ச் நகரில் டீன்ஸ் அவ் பகுதியில், ஹெக்லி பார்க் அருகே மிகப்பெரிய மசூதியில் நேற்று வெள்ளிக்கிழமை தொழுகை நடந்து கொண்டிருந்த போது, திடீரென நுழைந்த மர்ம நபர் தொழுகை நடத்திக்கொண்டிருந்த மக்களை நோக்கி துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுடத் தொடங்கினார்.

இதனால், தொழுகையில் ஈடுபட்டிருந்த மக்கள் பலர் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அலறியடித்துக்கொண்டு வெளியே ஓடினார்கள். இந்த துப்பாக்கிச் சூட்டில் இருந்து பங்களாதேஷ் கிரிக்கெட் அணி அருந்தப்பில் தப்பியது எனக் கூறப்படுகிறது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, நியூஸிலாந்துக்கு பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. கிறிஸ்ட் சேர்ச் நகரில் இன்று 3ஆவது டெஸ்ட் போட்டி தொடங்க இருந்தது. இதனால், வீரர்கள் அனைவரும் மசூதிக்கு அருகே இருக்கும் நட்சத்திர ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று நண்பகல் தொழுகைக்காக வீரர்கள் அனைவரும் சொகுசு பஸ்ஒன்றில் மசூதிக்கு அழைத்து வரப்பட்டனர். மசூதி வளாகத்துக்குள் சில வீரர்களும், பஸ்ஸுக்குள் பல வீரர்களும் இருந்தபோது, மசூதிக்குள் துப்பாக்கிச் சூட் டுச் சத்தம் கேட்கத் தொடங்கியது.

இதைக் கேட்டதும், மசூதி வளாகத்துக்குள் சென்ற பங்களாதேஷ் வீரர்கள் சிலர் அங் கிருந்து தப்பி வெளியே ஓடினார்கள். பின் னர் பஸ்ஸில் இருந்த வீரர்களுக்குத் தக வல் தெரிவிக்கப்படவே, அதிலிருந்த வீரர்க ளும் ஓடி ஹோட்டலுக்குச் சென்று உயிர் தப்பினார்கள்.

இது குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் செய்தித் தொடர்பாளர் ஜலால் யூனுஸ் கூறுகையில், அனைத்து கிரிக்கெட் வீரர்களும் தொழுகைக்குச் செல்வதற்காக சொகுசு பஸ்ஸில் மசூதிக்கு வந்தோம். மசூதி வளாகத்துக்குள் சென்றபோது துப்பாக்கிச் சூடு நடந்ததால் அங்கிருந்து ஓடி உயிர் தப்பினோம். யாருக்கும் எந்தவிதமான காயமும் ஏற்படவில்லை. பாதுகாப்பாக இருக்கிறார்கள். ஆனால், அதிர்ச்சியில் உறைந்துள்ளார்கள். வீரர்கள் தங்கியுள்ள ஹோட்டலுக்குப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

பங்களாதேஷ் வீரர் தமிம் இக்பால் ட்விட்டரில் கூறுகையில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களிடம் இருந்து ஒட்டுமொத்த அணியும் தப்பியது. மிகவும் பதற்றத்துடன், அச்சத்துடன் இருக்கிறோம். தொடர்ந்து பிரார்த்திக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

மற்றொரு வீரர் முஷ்பிகுர் ரஹ்மான் ட்விட்டரில் கூறுகையில், அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ் அனைவரையும் கிறிஸ்ட் சேர்ச் துப்பாக்கிச் சூட்டில் இருந்து காத்துவிட்டார். நாங்கள் உண்மையில் அதிர்ஷ்டசாலிகள். இதுபோன்ற சம்பவம் இனி நடக்கக் கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் அணியில் திறன் மேம்பாட்டு ஆலோசகர் சீனிவாஸ் சந்திரசேகரன் முகப்புத்தகத்தில் கூறுகையில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களிடம் இருந்து அதிர்ஷ்டவசமாக 'ஜஸ்ட் எஸ்கேப்' என்ற ரீதியில் உயிர் தப்பினோம். என் இதயத்துடிப்பு மிகவும் வேகமாக, மோசமாகத் துடிக்கிறது. எங்கு பார்த்தாலும் பதற்றம் காணப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் நாளேடான டெய்லி ஸ்டாரின் நிருபரும், பங்களாதேஷ் அணியுடன் இருப்ப வருமான மஜார் உதின் ட்விட்டரில் கூறுகையில், நாங்கள் மசூதிக்குள் சென்ற போது துப்பாக்கிச் சூடு நடந்து கொண்டிருந்தது. அந்த சத்தத்தைக் கேட்டு, அங்கிருந்து தப்பி ஓடி பஸ்ஸில் இருந்த வீரர்களுக்கும் தெரிவித்தோம். அவர்களும் பஸ்ஸிலிருந்து குதித்து, சாலையில் ஓடி ஹோட்டலுக்கு வந்து உயிர் தப்பினோம் எனத் தெரிவித்துள்ளார். (உ)



# மட்ரிட் அணி வீரர்களுக்கான பயிற்சியை ஆரம்பித்த சிடேன்!

உலகின் முன்னணி உதைபந்து அணிகளில் ஒன்றான ரியல் மட்ரிட் அணியின் புதிய பயிற்சியாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள சினேடின் சிடேன், வீரர்களுக்கான பயிற்சிகளை உத்தியோக பூர்வமாக தொடங்கியுள்ளார்.

ரியல் மட்ரிட் அணியின் ஆலோசகர்களை நேற்றுமுன்தினம் சந்தித்த அவர், அதன்பிறகு வீரர்கள் பயிற்சிகளை மேற்கொள்ளும் உடற்பயிற்சி கூடத்தைப் பார்வையிட்டார்.

இதன்பிறகு, வெல்டிபேபஸ் விளையாட்டரங்கில் வீரர்களை சந்தித்த அவர், அவர்களுடன் சிறிது நேரம் உரையாடி, பிற்பாடு அவர்களுக்கு பயிற்சி அளித்தார்.

கடும் பின்னடைவைச் சந்தித்து வரும் ரியல் மட்ரிட் அணியை மீள கட்டியெழுப்பும் வகையில், 10 மாதங்களுக்கு பிறகு, 46 வயதான சினேடின் சிடேன், மீண்டும் அணியில் இணைந்துள்ளார்.

கடந்த ஆண்டு மே மாதம் ரியல் மட்ரிட் அணியின் பயிற்சியாளர் பதவியை துறந்த சினேடின்சிடேன், அணியின்நிலையை கருத்திற் கொண்டு அணியை மீளக் கட்டியெழுப்புவதற்காக பயிற்சியாளர் பொறுப்பை ஏற்றுள்ளார்.

இதற்கமைய சினேடின் சிடேன், எதிர்வரும் 2022ஆம் ஆண்டு வரை தனது பயிற்சியாளர் பதவியை தொடர ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

# இறுதிவரை பரபரப்பான ஆட்டத்தில் வென்றது யங்கென்றீசியன் அணி



பீஸ் ஸ்போர்ட்ஸ் அனுசரணையில் நாவாந்துறை கலைவாணி வி.க நடத்தும் அணிக்கு 07 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஏ பிரிவு அணிகளுக்கான ஆட்டம் ஒன்றில் இளவாலை யங்கென்றீசியன் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் யங்கென்றீசியன் அணி லீக் சுற்றின் முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது.

யங்கென்றீசியன் அணி சார்பாக மகீபன் ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார்.



# சூட்டுத் தாக்குதலை அடுத்து நியூஸிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடர் இரத்தானது

நியூஸிலாந்தில் நடைபெற்ற கொடூர துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலையடுத்து, நியூஸிலாந்து அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக, நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி இன்று கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெறவுள்ள, மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் விளையாட இருந்தது.

இந்த நிலையில், வீரர்களின் பாதுகாப்பு கருதி இந்தத் தொடரை இரத்துச் செய்வதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெறவிருந்த இப்போட்டியில் விளையாடுவதற்காக அங்கு சென்றிருந்த வீரர்கள் நேற்று வெள்ளிக்கிழமை தொழுகைக்காக கிறிஸ்ட் சர்ச் நகரில் டீன்ஸ் அவ் பகுதியில் ஹெக்லி பார்க் அருகே உள்ள மிகப்பெரிய மசூதிக்கு சென்றுள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்திலேயே சூட்டித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து, திட்டமிட்டபடி இன்று போட்டி தொடங்குமா என்ற சந்தேகம் இருந்த நிலையில், பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, நியூஸிலாந்து சபையுடன் இது தொடர்பாகப் பேசியது. இதன்பிறகு, 3ஆவது டெஸ்ட் போட்டி இரத்து செய்யப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. (ஐ)



# சண்டிக ஹத்துருசிங்கவை நாடு திரும்புமாறு பணிப்பு

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 5ஆவது ஒருநாள் போட்டியின் பின்னர் இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் சண்டிக ஹத்துருசிங்க நாட்டுக்குத் திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக இரு அணிகளுக்கும் இடையிலான இருபதுக்கு இருபது தொடரின் பதில் பயிற்றுவிப்பாளராக ஸ்டீவ் ரிக்ஸன் நியமிக்கப்பட்டுள்ளார் என இலங்கை கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 5ஆவது ஒருநாள் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற 4 போட்டிகளிலும் இலங்கை அணி தோல்வியைத் தழுவியுள்ள நிலையில் தென்னாபிரிக்கா அணி 4:0 என தொடரில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புகள்
அனைத்து பரீட்சைகளுக்கும் உரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் உரிய விடயங்கள் வழமையான விரிவுரையாளருடன் துறைசார் வளவாளர்களினால்
பிரதி சனிக்கிழமை வகுப்பு
8.30 - 1.30 வரிமதிப்பீட்டாளர்
10.00 - 4.00 பதிவாளர் (open)
1.30 - 4.00 பதிவாளர் (Limited)
10.00 - 2.30 சட்டமாணி
10.00 - 2.30 நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் (open)
11.00 - 2.00 பல்கலைக்கழக உளச்சார்பு
பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில்
SLAS open/Limited SLEAS open/ Limited 9.00 - 3.30
ஆசிரியர் தெரிவு 09.00 - 2.00
நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் 10.00 - 2.30
தொடர்புகளுக்கு 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரிவீதி, கொமர்ஷல்வங்கி அருகில்)

## யாழில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் ஆரம்பித்து முற்றவெளி வரை இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது. இந்தப்பேரணிக்கு, தமிழ் மக்கள் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி., புளொட், சமூகநீதிக்கான மக்கள் அமைப்பு என்பன முழுமையான ஆதரவைத் வழங்குவதாக அறிவித்துள்ளன.

அத்துடன் பொது அமைப்புக்களும் இந்தப் பேரணிக்குத் தமது ஆதரவை வெளியிட்டுள்ளன.

இந்த எழுச்சிப் பேரணியில் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் திரள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை மத்தி மற்றும் நகுலேஸ்வரம் கிராம சேவகர் பிரிவுகளிலேயே இந்த 232 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது.

167 ஏக்கர் காணி காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்கும், ஜனாதிபதி மாளிகை உள்ளடங்கிய 65 ஏக்கர் காணி சுற்றுலா அதிகார சபைக்கும் வழங்க ஜனாதிபதியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த உத்தியோகபூர்வ அறிவித்தல் தெல்லிப்பழை பிரதேசசெயலாளருக்கு அறிவிக்கப்பட்டு, நில அளவீட்டு பணிகளுக்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர்களுக்குத் தகவல் வழங்கப்பட்டு அளவீட்டு அறிவித்தலை தெல்லிப்பழை பிரதேச செயலகம் ஒட்டியுள்ளது.

மிக இரகசியமாக நடந்த இந்த விவகாரத்தை அறிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேசினர்.

அரசு இதற்கு உத்தரவிடவில்லை. காணி அமைச்சின் ஊடாகவே இந்த விவகாரம் கையாளப் படவேண்டும். இந்த விடயத்தை உடனடியாக கைவிட உத்தரவிடுகிறேன் என பிரதமர் வாக்குறுதியளித்திருந்தார்.

எனினும், இதுவரை இந்தக் காணி சுவீகரிப்பை நிறுத்தும் நடவடிக்கையெதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிகின்றது.

எதிர்வரும் 22ஆம் திகதி அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ள அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

சுற்றுலா அதிகார சபையுடன் தொடர்புடைய கூட்டமொன்றில் ஜனாதிபதியே இந்தக் காணி சுவீகரிப்பு உத்தரவைப் பிறப்பித்தார். நிறுத்தும்படி சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பிடமிருந்தும் உத்தரவு வரவில்லை. அதனால் திட்டமிட்டபடி 22 ஆம் திகதி அளவீட்டு பணிகளை மேற்கொள்வோம் எனச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறியுள்ளனர். (ஐ)

## பால்மாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெற்றின் விலை 60 ரூபாவாலும் 400 கிராம் பால்மா பக்கற்றின் விலை 25 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை உப குழுவால் முன்வைப்பட்டு அமைச்சரவையால் ஒப்புதல் வழங்கப்பட்ட இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளுக்கான விலைச் சூத்திரத்தின் அடிப்படையிலேயே இந்த விலை அதிகரிப்புக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள்ளது. (ஐ)

## கோட்டா வெளிநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளர்த்தியுள்ளது.

மார்ச் 26ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 12ஆம் திகதி வரை வெளிநாட்டுப் பயணத்துக்கு கோட்டாபய அனுமதி கோரியிருந்தார். இந்த வழக்கு நேற்று விசேட மேல் நீதிமன்றத்தில் நீதிபதிகள் சம்பத் அபயக்கோன், சம்பத் விஜயரட்ண, சம்பா ஜானகி ஆகியோர் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

டி.ஏ.ராஜபக்ஷ ஞாபகார்தத நினைவிடம் கட்டுவதற்கு அரச நிதியிலிருந்து 3 கோடி 30 லட்சம் ரூபா அரச நிதியை துஷ்பிரயோகம் செய்த வழக்கு அவர் மீது தொடரப்பட்டுள்ளது.

கோட்டாபயவின் மனுவை ஆராய்ந்த நீதிபதிகள், அவரது வெளிநாட்டுப் பயணத்தடையைத் தற்காலிகமாக தளர்த்தி அனுமதியளித்தனர். (ஐ)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க டொலர்களை வழங்கியிருக்கிறது.

வடக்கு, வட மத்தி, கிழக்கு, ஊவா மாகாணங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவிருக்கிறது.

வீதி அபிவிருத்தி, சுகாதாரம், கழிவறைவசதிகள் என்பனவற்றை மேம்படுத்துவது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பும் இதற்காகப் பெற்றுக் கொள்ளப்படவிருக்கின்றது. இலங்கை வறுமையைக் குறைப்பதில் வெற்றிகரமான பெறுபேறுகளை கண்டிருப்பதாக உலக வங்கி அறிவித்திருக்கிறது.

நாட்டின் வறுமை மட்டம் 2016ஆம் ஆண்டில் நான்கு தசம் ஒரு சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

ஆனால் நாட்டின் சில பிரதேசங்களில் இன்னும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள். நீர் விநியோகம், சந்தை வசதிகள் கிராமிய மின்சாரம், தொலைத் தொடர்பாடல் ஆகிய துறைகளை மேம்படுத்துவது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## ஹெரோய்ன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டனர். அவர் மூவரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வைத்து மாணவர்கள் மூவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டுப் பெறுபேற்றுக்காக காத்திருப்பவர்கள் என மன்றில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் ஹெரோய்ன் போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனை அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் அங்கு இரகசியச் சுற்றுக்காவலில் பொலிஸார் ஈடுபட்டிருந்தபோது, சுமார் 100 மில்லிக்கிராம் எடையுடைய ஹெரோய்ன் போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அதனை நுகரத் தயாராகியபோதே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்

சந்தேகநபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் மாணவர்கள். அவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதிவிட்டுப் பெறுபேற்றுக்காக் காத்திருக்கின்றனர் என அவர்களின் சட்டத்தரணி கூறினார்.

வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ)

## பிரியங்காவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் நேற்று வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ மீதான வழக்கு விசாரணை வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றில் நேற்று நடை பெறவுள்ள நிலையில் நீதிமன்றத்துக்கு வெளியே புலம்பெயர் தமிழர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கில் அரசியல் அழுத்தத்தை எதிர்த்தும், அவரைக்கைது செய்ய வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த ஆண்டு பிரிட்டனிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு முன்னால் புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ தமிழர்களை அச்சுறுத்தினார் எனக் குற்றம்சாட்டப்பட்டது. அவர் கழுத்தை அறுக்கும் வகையில் சைகை காட்டிய காணொலி வெளியாகி பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த விசாரணையின்போது, புலம்பெயர் தமிழர்களைக் கழுத்தை அறுக்கும் சைகையைக் காண்பித்து அச்சுறுத்தல் விடுத்த செயலானது இலங்கை இராணுவ அதிகாரியான பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் கடமையுடன் தொடர்புடையதல்ல என வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ஐ)

## பரிசுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் நாடு என்ற வகையில் நல்லிணக்கத்தை இழந்தமையே ஜெனீவாவில் இலங்கைப் பிரச்சினையைக் கையாள்வதற்குக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

'மொழி வளர்ப்போம் மனதை வெல்வோம்' என்னும் கருப்பொருளில் அரசகரும மொழிக் கொள்கையைப் பாடசாலை மாணவரிடையே நடைமுறைப்படுத்தும் நிகழ்வு நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மனோ இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜெனீவாவில் பரிசுத்தம் இல்லாத வெள்ளையார்கள் எம்மீது விசாரணைகளை நடத்துகின்றனர். அவர்களின் பிழைகள் இலங்கையில் இடம்பெற்றதை விடவும் பெரியவை. ஒரு வகையில் இது நகைச்சுவையானது.

நாட்டில் உள்ளவர்கள் இரு மொழிகளையும் கற்றால் இவ்வாறான பிரச்சினையிருக்காது. நாட்டில் மிகப்பெரிய தேசியப் பிரச்சினை உள்ளதாகத் தெரிவித்து வருகின்றனர். நாடாளுமன்றத்தில் உள்ள நல்லிணக்கத்தைவிட பாடசாலைகளில் நல்லிணக்கம் காணப்படுகின்றது. நாட்டின் பிரச்சினைகளை உள்நாட்டிலேயே தீர்த்துக்கொள்ளாமல் நாம் இதுவரை தோல்வியடைந்து காணப்படுகின்றோம் – என்றார். (ஐ)

## கட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கி வைத்திருக்கிறார் என்றும், இதனால் சுதந்திரக் கட்சியில் நடக்கும் விடயங்கள் தனக்குத் தெரியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

திருடர்கள், கொலைகாரர்கள் மற்றும் மோசமான வேலைகளுக்கு எதிராகச் செயற்படுவதால், என்னைக் கட்சிப் பணிகளில் இருந்து ஒதுக்கி வைத்துள்ளனர். நான் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலேயே இருக்கின்றேன் – என்றார். (ஐ)

## எமது நிலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறையில் இருந்து 1990 இல் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 1.30 மணியளவில் ஜும்மாத் தொழுகையின் பின்னர் சிலாவத்துறையில் உள்ள இரண்டு பள்ளிவாசல்களில் இருந்து பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் மக்கள், பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு கடற்படை முகாமை நோக்கிப் பேரணியாகச் சென்றனர்.

பின்னர் சிலாவத்துறையில் 24 ஆவது நாளாகப் போராட்டம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்ற மக்கள் வீதிக்கு அருகில் நின்று கோசமிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் காணிகளில் உள்ள கடற்படையினரை வெளியேற்றி தமது காணியை மீண்டும் வழங்கும்படி அவர்கள் கோசமெழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், மன்னார் பிரஜைகள் குழு, மன்னார் மெசிடோ நிறுவனம், தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவை போன்றவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கினர்.

மக்களின் காணிகளில் நிலைகொண்டுள்ள கடற்படையினரை அகற்றி தமது காணிகளை வழங்கக் கோரி பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த மாதம் 20 ஆம் திகதி மாலை முதல் தொடர் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

1990 இல் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்ட இந்த மக்கள், 2009 இல் சொந்த இடங்களுக்குத் திரும்பியபோதும் கடற்படையினர் அங்கிருந்து வெளியேறவில்லை. சுமார் 218 வரையான குடும்பங்கள் அகதி வாழ்க்கையை வாழ்கின்றன. இவர்களின் 35 ஏக்கர் காணிகள் கடற்படையால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் காணிகளைவிடுவித்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்த போதும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. இதையடுத்து, கடற்படை முகாமுக்கு முன்பாக நேற்றுடன் 24 ஆவது நாளாகத் தொடர் போராட்டம் இடம்பெற்று வருகிறது. இந்த நிலையில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (ஐ)

## கோட்டாவை கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஏகோபித்த ஆதரவுடன் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு கூட்டு எதிர்க்கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்கள் பலர் தமது ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

முன்னதாக தனது அமெரிக்கப் பிரஜாவுரிமையை நீக்கக் கோரும் விண்ணப்பத்தைக் கடந்த வாரம் கோட்டாபய ராஜபக்ஷ, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பி வைத்திருந்தார்.

அதன் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்காக அடுத்த வாரம் அவர் அமெரிக்காவுக்கும் பயணமாகின்றார்.

இந்நிலையிலேயே கூட்டு எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபயவை மஹிந்த களமிறக்குவதற்கு உறுதியாக முடிவெடுத்திருக்கிறார் என நேற்றிரவு தகவல்கள் கசிந்தன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சியின் சார்பில் யார் வேட்பாளராகப் போட்டியிடுவது என்ற சர்ச்சை நீடித்து வந்த நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் கூட்டு இணைந்து செயற்படுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் முற்றுப்பெற்றுவிட்டன என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## சர்வதேசத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுக் காரணம். அவரது செயற்பாடுகளாலேயே இன்று இலங்கை மீது சர்வதேசத்தின் பிடி இறுகியுள்ளது.

– இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

இலங்கையில் சர்வதேசத்தின் தலையீட்டை உறுதிப்படுத்திய மஹிந்த ராஜபக்ஷ, இன்று அதனை விலக்கிக் கொள்ளுமாறு கோருவது எந்த வகையில் சாத்தியம் எனவும் அந்தக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சர்வதேச நாடுகள் இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகளில் தலையீடு செய்ய அனுமதிக்க வேண்டாம் என மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். ஆனால் இவ்வாறு சர்வதேசம் தலையீடு செய்வதற்கு யார் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது?

அவரின் ஆட்சி காலத்தில் சர்வதேச நாடுகளுக்குச் செவி கொடுக்காமல் மிகவும் கடுமையான போக்கைக் கடைப்பிடித்தனர். அவ்வாறான நடவடிக்கைகள் காரணமாகவே இன்று சர்வதேசத்தின் தலையீடு அதிகரித்துள்ளது.

ஆனால் நல்லாட்சி அரசு மிக ஒழுக்கமான உறவைச் சர்வதேச நாடுகளுடனும், மனித உரிமைகள் கவுன்ஸிலுடனும் பேணியது. அதன் மூலமே இலங்கைக்கு எதிரான கரும்புள்ளிகள் அனைத்தும் இல்லாது செய்யப்பட்டுள்ளன – என்றார். (ஐ)

**பணிப்பெண் தேவை**

யாழ். அரியாலைப் பகுதியில் சிறுநீரக சத்திரசிகிச்சை செய்த நோயாளியை வீட்டில் தங்கி இருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு: தே.முகுந்தன் 077 402 2755

காலைக்கதிர் Kalaikathir



# தேசிய சுகாதார நலக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்





யாழ்ப்பாணம், மார்ச் 16

தேசிய சுகாதார நலக் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை தொடரவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சுகாதார மற்றும் சுதேசிய இராஜாங்க அமைச்சர் பைசர் ஹாசிம் கண்காட்சியை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இதன்போது யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட். வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் ஆர். கேதீஸ்வரன் உள்ளிட்ட சுகாதார திணைக்கள அதிகாரிகள், சுகாதார வைத்திய சேவை நிறுவங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ - 07)

# தொண்டராசிரியர்கள் நியமனத்தில் கிழக்கு புறக்கணிக்கப்படுவது ஏன்?

## யோகேஸ்வரன் எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு, மார்ச் 16

தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் கிழக்கு மாகாணம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவது ஏன்? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிழக்கில் தொண்டர் ஆசிரியர் சேவைக்கு 445 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களுக்கான நியமனங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

இவ்வாறு கிழக்கு மாகாணம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட காரணம் என்ன?. எனவே, அவர்களுக்கான நியமனங்களை உடனடியாக வழங்கி, கிழக்கின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் - என்றார்.

(ஐ)

# 250 கிலோ வெடிபொருள்கள் அம்பாந்தோட்டையில் மீட்பு!



அம்பாந்தோட்டை கீழ் அந்தரவெவ பகுதியில், அதிசக்திவாய்ந்த 250 கிலோ கிராம் வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சூரியவெவ விசேட அதிரடிப்படையினரால் இந்த வெடிபொருள்கள் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன.

வெடிபொருள்கள் அடங்கிய லொறியைச் சோதனையிடுவதற்காக நிறுத்தக் கோரி பொலிஸார் சமிக்ஞை செய்தபோதும் அதனை பொருட்படுத்தாது லொறி வேகமாகச் செலுத்திச் செல்லப்பட்டது. பின்னர் அது இடைநடுவில் கைவிடப் பட்ட நிலையில் காணப்பட்டது.

கைவிடப்பட்ட லொறியைச் சோதனையிட்ட பொலிஸார் வெடிபொருள்களைக் கைப்பற்றினர்.

(ஐ)

# எமில் காந்தன் உட்பட 14 இலங்கையர் இன்டர்போலின் சிவப்புப் பட்டியலில்!

கொழும்பு, மார்ச் 16

சர்வதேசக் குற்றவியல் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள்எனத்தெரிவித்து இலங்கையர்கள் 14 பேரைச் சிவப்புப் பட்டியலில் இணைத்துள்ளது சர்வதேச பொலிஸான இன்டர்போல்.

இந்தப் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் என இலங்கைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்ட எமில்காந்தன் உட்பட 8 தமிழர்கள் உள்ளடங்குகின்றனர்.

இந்தச் சிவப்பு பட்டியல் இன்டர்போலின் இணையத்தளத்தில் தேடப்படுபவர்களின் ஒளிப்படத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

(ஐ)

உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா?

நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....

12 WARRANTY

- இலவச நீர்ப்பரிசோதனை
- இலவச ஆலோசனை
- 24 Hours விற்பனைக்குப் பிந்திய சேவை
- Life Time Service Warranty






நீங்கள் அருந்தும் நீர் Yarl Smart Water Filter நீராக இருந்தால் நீங்களும் SMART

உங்கள் வீடுகளில் / தொழிற்சாலைகளில் வேறு நிறுவனங்களினால் பொருத்தப்பட்டிருக்கும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் எம்மால் சரிபார்த்து தரப்படும்.

Yarl Smart Water Solution (Pvt) Ltd

Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410

No.319,K.K.S Road,Jaffna. / Karadippokku Junction,A9 Road,Kilinochchi.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 16.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.